©

D.
424,31 'N96
1996-1-2
215919

வெளியீடு 5-12-96 Issued 5-12-96

442/97

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மே 23, 1996– தொகுதி 1 – எண் 2

Thursday the 23rd May, 1996 – Volume 1 – No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

## 23-5-1996

உள்ளடக்கம்

பக்கங்கள்


| | |
|---|---|
| 1. உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்துக் கொள்ளுதல். | 15-16 |
| 2. பேரவைத் தலைவர் தேர்தல். | 16-17 |
| 3. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல். | 18 |
| 4. பேரவைத் தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் பாராட்டுரைகளும், பாராட்டுரைகளுக்கு நன்றியுரையும்-- | 18-64 |
| *மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 19-21 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | 21-24 |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 24-29 |
| திரு. ஜி. பழனிசாமி | 29-32 |
| *திரு. எஸ். திருநாவுக்கரசு | 32-37 |
| திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 37-42 |
| திரு. பி. என். வல்லரசு | 42-44 |
| திரு. டி. மணி | 45 |
| திரு. சி. வேலாயுதன் | 46 |
| *டாக்டர் க. கிருஷ்ணசாமி | 47 |
| திரு. பி. வெங்கடசாமி | 47,48 |
| *மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி | 49-54 |
| *மாண்புமிகு திரு. இ. இளம்வழுதி | 54-56 |
| மாண்புமிகு பேரவைத் தலைவர் | 56-66 |

பக்கங்கள்

5. அறிவிப்புகள்—

(அ) அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்கள் நியமனம். 64-65

(ஆ) பேரவை அலுவல் குறித்து 66

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். 66

218919

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை**

**வைகாசி 10, தாது - திருவள்ளுவர் ஆண்டு 2027**

**1996, மே 23, வியாழக்கிழமை**

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் **திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):**

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்."

இந்தப் பணியை இந்த வழிமுறையில் இவர் முடிக்க வல்லவர் என்பதை ஆய்ந்து, தேர்ந்து அதன்பிறகு அந்தப் பணியை அவரிடம் ஒப்படைக்க வேண்டும்.

[**குறிப்பு** :- ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்துக் கொள்ளுதல்

**மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** இன்றைய முதல் நிகழ்ச்சி ஏற்கெனவே உறுதிமொழி எடுத்துக் கொள்ளாத உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொள்ளுதல் ஆகும். ஏற்கெனவே உறுதிமொழி எடுத்துக் கொள்ளாத உறுப்பினர்கள் இருந்தால் அவர்கள் இப்போது உறுதிமொழி எடுத்துக்கொள்ளலாம். அரசமைப்புச் சட்டத்தின்படி உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொள்ளாமல் பேரவையில் அமரக்கூடாது. யாரும் இல்லையா?

[*1996 மே 23*

*(நேற்று உறுதிமொழி எடுத்துக்கொள்ளாத நான்கு உறுப்பினர்கள் பெயர்களை - திரு. கே.ஆர். இராமசாமி, திருவாடானை தொகுதி; திரு. கே. சி. கணேசன், ஜெயங்கொண்டம் தொகுதி; திரு. ஆ.மு. முனிரத்தினம், சோளிங்கர் தொகுதி; திரு.வி.கே. லட்சுமணன், கோயம்புத்தூர் கிழக்கு தொகுதி-செயலாளர் அறிவித்தார்.)*

## 2. பேரவைத் தலைவர் தேர்தல்

**மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** அடுத்து பேரவையின் இன்றைய அலுவல் "அரசமைப்பின் 178-வது பிரிவின்கீழ் பேரவைத் தலைவர் தேர்தல்" ஆகும். அப்பதவிக்கு வேட்பாளர்களின் வேட்புத் தாள்கள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்க்கப்பட்டுள்ளன. சட்டமன்றப் பேரவை விதி 7, உள்விதி (4)இன்படி பேரவைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டவர்கள், முன்மொழிந்தவர்கள், அதை வழிமொழிந்தவர்கள் ஆகியோர்களின் பெயர்களை நான் முதலில் இந்தப் பேரவைக்கு அறிவிக்க வேண்டும்.

**அவர்களின் விவரம்:**

1. நியமனம் செய்யப்பெற்றவர்: **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள்.**

முன்மொழிந்தவர்: **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி அவர்கள்.**

வழிமொழிந்தவர்: **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள்.**

2. நியமனம் செய்யப்பெற்றவர் : **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள்.**

முன்மொழிந்தவர் : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள்.**

வழிமொழிந்தவர் : **மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்கள்.**

பேரவைத் தலைவர் பதவிக்கு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் மட்டும் நியமனம் செய்யப்பெற்றிருப்பதால் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் இப்பேரவையின் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இத்துடன் என்னுடைய அலுவல் முடிகிறது.



*1996 மே 23*] [தற்காலிகப் பேரவைத் தலைவர்]

இப்பொழுது பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்களுக்கு எனது உளமார்ந்த பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்களின் குடும்பம் பெரிய குடும்பம் ஆகும். அவருடைய தந்தையார், 'பொன்னம்மாள் மிகவும் நல்ல பெண், அவருக்கு ஓட்டளியுங்கள்' என்று ஊர் ஊராகச் சொன்னார்கள். அந்தத் தந்தையின் திருமகனார் இன்று பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்காக நான் உண்மையிலேயே உளமார பாராட்டுவதோடு எனது வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் என்னுடைய நல்வாழ்த்துக்களையும் அவர்களுடைய பணி சிறக்க வேண்டுமென்ற எனது வாழ்த்துக்களையும் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேர்ந்தெடுக்கப்படுகின்ற பேரவைத் தலைவரை, பேரவை முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவரும் அழைத்துச் சென்று பேரவைத் தலைவரது இருக்கையில் அமரச் செய்வது மரபாகும்.

எனவே, பேரவைத் தலைவர் அவர்களை, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், ஆளுங்கட்சிக்கு அடுத்து, பிரதான சட்டமன்ற எதிர்க்கட்சியாக இருக்கும் தமிழ் மாநில காங்கிரஸ் (மூப்பனார்) சட்டமன்றக் கட்சியின் தலைவர் திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்களும் அழைத்து வந்து பேரவைத் தலைவர் இருக்கையில் அமரச் செய்யும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்கள் இருக்கையில் அமர்வதற்கு வரும் நேரத்தில் எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் எழுந்து நின்று, பேரவைத் தலைவர் அவர்கள் இருக்கையில் அமர்ந்த பின் எல்லோரும் தங்கள் இடத்தில் அமர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*(பேரவைத் தலைவர் அவர்களை, அவை முன்னவர் மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும், பிரதான எதிர்க்கட்சியின் தலைவர் திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்களும் அழைத்து வந்து அவர்களது இருக்கையில் அமரச் செய்தார்கள்.)*

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களுக்கு என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். பேரவைத் தலைவர் என்ற முறையில் என்னுடைய முதல் அலுவல் இந்தப் பேரவைக்கு ஒரு துணைத் தலைவர் தேர்தலை நடத்தியாக வேண்டும்.

[1996 மே 23

## 3. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கான வேட்புமனுத் தாள்கள் ஏற்கெனவே பெறப்பட்டுள்ளன. பேரவை விதி 8, உள்விதி (2)இன்படி, பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பெற்றவர், முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியோர்களின் பெயர்களை நான் முதலில் இப்பேரவைக்கு அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நியமனம் செய்யப்பெற்றவர்: **திரு. இ. இளம்வழுதி.**

முன்மொழிந்தவர்: **மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் மு. கருணாநிதி அவர்கள்.**

வழிமொழிந்தவர்: **மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள்.**

திரு. இ. இளம்வழுதிக்கு இன்னொரு வேட்புமனு.

முன்மொழிந்தவர்: **மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின் துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள்.**

வழிமொழிந்தவர்: **மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள்.**

பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு திரு. இ. இளம்வழுதி அவர்கள் மட்டும் நியமனம் செய்யப்பெற்றிருப்பதால், திரு. இ. இளம்வழுதி அவர்கள் இப்பேரவையின் துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு அறிவிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. பேரவைத் தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் பாராட்டுரைகளும், பாராட்டுரைகளுக்கு நன்றியுரையும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவைத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் ஆகியோருக்கு வாழ்த்துரை, முதலில் மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.



1996 மே 23]

முற்பகல் 9-40

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு சட்டமன்றப் பேரவையினுடைய தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்றத்தினுடைய மதிப்பிற்குரிய தலைவராக தாங்கள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிற இந்த நேரத்தில் என்னுடைய மகிழ்ச்சியையும், பாராட்டையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். தற்காலிகத் தலைவராக அமர்ந்து இந்த அவையினுடைய தொடக்ககாலக் கடமையை நிறைவேற்றி வைத்த மாண்புமிகு திருமதி பொன்னம்மாள் அவர்கள் தங்களைத் தேர்ந்தெடுத்தவுடன் வரவேற்கிறபோது குறிப்பிட்டதைப்போல, ஒரு பாரம்பரியம் உள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர் என்ற வகையில், நடுவு நிலைமை என்ற தகுதியைக் காப்பாற்றுகிற எல்லாவிதமான சிறப்பும் தங்களுக்கு இருக்கிறது. சட்டப்பேரவைத் தலைவர் என்ற வகையில் ஒரு கட்சியிலே இடம் பெற்றவராக ஏற்கெனவே இருந்தாலும்கூட, அந்தக் கட்சிக்கு அப்பாற்பட்டவராகவும், அனைத்துக் கட்சியினரையும் ஒரே கண்ணோட்டத்தில் நோக்குபவராகவும், அதன்மூலமாக அவையில் எல்லோரும் நல்ல வாய்ப்பு பெறுவதன் மூலமாக, ஒரு சுமுகமான நல்ல உறவு நிலைப்பதற்கு வழி காட்டுபவராகவும் அவைத் தலைவர் அவர்கள் விளங்க வேண்டும் என்பது நீண்டகாலமாக உணரப்பட்டு இருக்கிற உண்மை ஆகும். அந்த உணர்வுகளைத் தாங்கள் பிரதிபலிக்கின்ற தகுதி வாய்ந்தவர்களாக விளங்குகிறீர்கள். ஒரு சிறந்த வழக்கறிஞராகவும், பட்டறிவு பெற்றவர் என்ற முறையில் ஒரு நீதி அரசராகவும் இருந்து செயல்படுவதற்கான தகுதி தங்களுக்கு உண்டு என்ற முறையில், இந்த அவையை நடத்திச் செல்வதில் ஏற்கெனவே சில காலகட்டத்தில் சில குறைகள் இந்த அவையில் ஏற்பட்டு இருந்தாலும்கூட, அப்படிப்பட்ட குறைகளுக்கு இடம் இல்லாத வகையில், வேறுபல மாநிலச் சட்டமன்றங்களுக்குக்கூட தமிழகச் சட்டமன்றம் வழிகாட்டுகிற பெருமைக்குரியதாக இருக்கிறது என்று மற்றவர்கள் ஏற்கத்தக்க வகையில் இந்த அவையை நடத்திச் செல்வீர்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

உண்மையாகவே நாட்டு மக்களுடைய-கோடிக்கணக்கான மக்களுடைய-- உள்ள உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற மன்றமாகச் சட்டமன்றம் விளங்கி ஆக வேண்டும். அப்படி விளங்குவதற்கு, கருத்துக்களுக்குத்தான் முதன்மை தந்து ஆக வேண்டும். அந்தக் கருத்துக்கள் எவ்வளவு வேறுபட்ட கருத்துக்களாக இருந்தாலும்கூட,

சட்டமன்றத்திலே அந்தக் கருத்து இடம் பெறுவதன் மூலமாக, நாட்டு மக்கள் தங்களுடைய உணர்வு பிரதிபலிக்கப்பட்டதாக எண்ணி ஆறுதலும், மகிழ்ச்சியும் அடைவார்கள். எனவே, அனைத்துத் தரப்பு கருத்துக்களும் இந்த அவையில் ஒலிப்பதன் மூலமாக, இடம் பெறுவதன் மூலமாக, நாட்டு மக்களை இந்தச் சட்டமன்றம் முழு அளவுக்கு பிரதிபலிப்பு செய்வதாக இருக்கிறது ; மக்களுடைய உணர்வுகளை எடுத்துக்காட்டுகிற அவையாக இருக்கிறது என்ற சிறப்பை உருவாக்குவதற்கு தாங்கள் வழி காட்டுவீர்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஓர் அரசியல் இயக்கத்தையே ஒரு குடும்பமாக உணர்த்தி, அந்த இயக்கத்தை நடத்துவதற்கு வழி காட்டினார்கள். அந்தக் குடும்ப உணர்வு சில நேரங்களிலே பழுதுபடுவதும் உண்டு. ஆனால், சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் நாட்டுக்காக நாம் ஒரு குடும்பமாக இங்கே இடம் பெற்று இருக்கிறோம். குடும்பத்திலேயும் வேறுபாடு வருவது உண்டு. ஆனால், அந்த வேறுபாடுகள், குடும்ப உணர்வு காரணமாக மெல்ல மறைந்து விடும். எனவே, அப்படிப்பட்ட நல்ல உணர்வு வளருகிற ஒரு பெரிய குடும்பமாக, நாட்டு மக்களுடைய பாதுகாப்புக்குரிய மன்றம் சட்டமன்றம் என்று எடுத்துக்காட்டுவதாக, அரசு அலுவலர்கள் பொறுப்பு உணர்ந்து செயல்படுவதற்கு ஏற்ற வண்ணம் சட்டமன்றத்திலே இடம் பெறுகிற கருத்துக்கள் அவர்களை ஊக்கப்படுத்துவதாக அமையக்கூடியதாக, இந்தச் சட்டமன்றம் விளங்குவதற்கு தாங்கள் வழி காட்ட வேண்டும் ; தாங்கள் துணைநிற்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தங்களுடைய அருமைத் தந்தையார் தமிழவேள் பி.டி. ராஜன் அவர்கள் தமிழ்நாட்டில் ஓர் அரசியல் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும்கூட அனைத்துக் கட்சியினரும் பாராட்டுகிற ஒரு பண்பாளராகத் திகழ்ந்தார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள், அவர்களைப் "பண்பாளர்" என்று அழைப்பதே அவருக்குப் பெருமை என்று அவ்வாறு அழைத்தார்கள்.

*முற்பகல் 9-45*

எனவே, அப்படிப்பட்ட பண்பாளர் வழியிலே வருகிற தாங்கள், இந்த அவை நல்ல பண்போடு, சிறப்போடு நடைபெறுவதற்கு உறுதுணையாக விளங்கி, இந்த அவைக்கு ஏற்கெனவே எந்த ஒரு காரணத்தாலே ஒரு குறை ஏற்பட்டிருந்தாலும், அந்தக் குறை



நீங்குவதற்குத் தாங்கள் துணை நிற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தங்களுக்கு என்னுடைய உளமார்ந்த வாழ்த்துக்களை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அவையினுடைய துணைத் தலைவராக-துணைச் சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற பரிதி இளம்வழுதி அவர்கள் இளைஞராக இருந்தாலும், அரசியலில் நல்ல தெளிவு பெற்றவர்கள். இந்த அவையிலே தனி ஓர் உறுப்பினராக இருந்து பலரும் பாராட்டுகிற வகையிலே கடமையை ஆற்றியவர்கள். இலட்சிய உணர்வு வாய்ந்த ஒரு இளைஞர். சட்டமன்றம் எப்படி எப்படி நடைபெறக்கூடாது என்பதைத் தானே அனுபவித்து உணர்ந்தவர். எனவே, அந்த வகையிலே சட்டமன்றம் நடைபெறாமல், நல்லமுறையிலே நடைபெறுவதற்குத் துணைத் தலைவர் அவர்கள் உறுதுணையாக விளங்கி, இந்த அவையினுடைய பெருமையைக் காப்பாற்றுவார் என்னும் நம்பிக்கையைத் தெரிவித்து, என்னுடைய வாழ்த்துக்களை அவருக்கும் தெரிவித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, தமிழ் மாநில காங்கிரஸ் (மூப்பனார்) கட்சித் தலைவர், மாண்புமிகு திரு. சோ. பாலகிருஷ்ணன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் இன்று இந்த அவையினுடைய தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். அதற்கு முதலில் தமிழ் மாநில (மூப்பனார்) காங்கிரசின் சார்பாக என்னுடைய வாழ்த்துக்களை உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் இன்று இந்த அவையினுடைய தலைவராக இருப்பது, இந்தத் தமிழகத்திற்கே ஒரு பெரிய பெருமை சேர்க்கக்கூடிய ஒரு நல்ல செயல் என்று நான் கருதுகிறேன்.

மதுரையைப் பொறுத்தவரை, நீங்கள்தான் மதுரையினுடைய முதல் குடிமகன். உங்களுக்கு அவ்வளவு மதிப்பு, மரியாதை மதுரையிலே உண்டு. கட்சி சார்பு இல்லாமல் உங்களை எல்லோரும் வந்து அணுகுவார்கள். அந்த அளவிற்கு நல்ல சிறந்த பண்பாளர் என்பதோடு, நம்முடைய முன்னவர் அவர்கள் சொன்னதுபோல, மிகப் பெரிய பாரம்பரியத்திலே வந்தவர்.

நான் 1977ஆம் ஆண்டு இந்தச் சட்டமன்றத்தில் உறுப்பினராக இருந்தபொழுது, மதுரைப் பல்கலைக் கழக செனட் உறுப்பினராகவும்

53/12ப-2

தேர்ந்தெடுக்கப்பட்டேன். அப்பொழுது சிண்டிகேட் மெம்பராக நீங்கள் போட்டியிட்ட நேரத்தில் நானே வலிய சென்று உங்களுக்கு வாக்களித்து நீங்கள் சிண்டிகேட் மெம்பராக வேண்டுமென்று நான் கேட்டேன். எல்லோரும் ஓட்டு கேட்கத்தான் வருவார்கள். ஆனால், நானே ஓட்டு உங்களுக்குப் போடுகிறேன் என்று முன்வந்ததற்குக் காரணம், உங்களுக்கு வாக்களிப்பதன் மூலம் அந்த வாக்குக்கு ஒரு பெருமை வர வேண்டும் என்பதற்காகத்தான் நான் அப்படி செய்தேன்.

அந்த நேரத்தில் உங்களிடம் நான் ஒரு சிபாரிசுக்கு வந்தேன். இரண்டு மாணவர்களை சிபாரிசுக்குக் கூட்டிக்கொண்டு உள்ளே வந்தேன். அவர்களுக்கு எல்லாம் நல்ல டீ வாங்கி கொடுத்துவிட்டு, நீங்கள் இரண்டுபேரும் வெளியே இருங்கள் என்று சொன்னீர்கள். அப்போது எனக்கு ஒரு பேராசிரியர் போல ஒரு அறிவுரை கூறினீர்கள். சிபாரிசுக்கு வரும்போது இவர்களை எல்லாம் கூட்டிக்கொண்டு வராதீர்கள், ஏனென்றால் அது நடக்கும், நடக்காமலும் போய்விடும், அதனால், வேதனைப்படுவார்கள், நீங்கள் தனியே வாருங்கள் என்று சொன்னீர்கள். அப்பொழுது நான் இளைஞனாகவும், சட்டமன்றத்திற்குப் புதியவனாகவும் இருந்ததினால், கூட கூட்டிக்கொண்டு போகாவிட்டால் சந்தேகப்படுவார்கள் என்பதற்காகத்தான் அவர்களைக் கூட்டிக்கொண்டு போனேன். தாங்கள் சொன்னதினுடைய அறிவுரைப்படி, அதிலிருந்து, இப்பொழுது வரை சந்தேகப்படுபவர்களை என்னிடம் வராதீர்கள் என்று சொல்லிவிடுகிறேன். அப்படி, அரசியலில் எனக்கு ஒரு முன்னுதாரணமாக, நல்ல பேராசிரியராக விளங்கினீர்கள்.

மதுரையைப் பொறுத்தவரை, எந்தக் காரியமாக இருந்தாலும் நான் உங்களிடம் வந்திருக்கிறேன். நீங்கள் முடிந்த அளவிற்கு உதவி செய்திருக்கிறீர்கள். இன்று இந்தச் சட்டமன்றத்தில் நீங்கள் தலைவராக இருந்து, நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து, செயல்படுகிற ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்ததற்காக நான் உண்மையிலேயே மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இந்தச் சபையிலே கடந்த 5 ஆண்டுக் காலமாக நாங்கள் பட்ட துன்பங்கள், துயரங்கள் எல்லாம் நம்முடைய நாட்டு மக்கள் மிக நன்றாக அறிவார்கள். இங்கே இருந்த முன்னாள் சபாநாயகர் தான் இந்த அரசைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதிலே எந்தவிதமான சந்தேகமும் கிடையாது.

ஆகவே, அந்த செங்கோல் என்பது வளைந்தது என்று சொல்வார்கள்,, இங்கே ஒடிந்தே விட்டது. அதற்கு எல்லாம் பல உதாரணங்கள்



சொல்லலாம். இருந்தாலும்கூட, இந்தச் சட்டமன்றத்தில் பேசுகின்ற ஒவ்வொரு வார்த்தையும் சட்டமன்ற குறிப்பேடுகளில் நிறைந்து நின்று ஆயிரம் ஆண்டுகள் நிலைத்து நிற்கும் என்ற காரணத்தால், தனி மனிதர்களைப் பற்றி, அவர்கள் செய்த தவறுகளைப் பற்றி எடுத்துச் சொல்லி, அதைக் குறிப்பேட்டில் ஏற்றி அவர்களுக்கு ஒரு நிரந்தரமான களங்கத்தை ஏற்படுத்த வேண்டாம் என்கின்ற உயர்ந்த பண்போடு நான் சில குறிப்புகளை எல்லாம் இங்கே சொல்ல விரும்பவில்லை. ஆனாலும் கூட, நீங்கள் உட்கார்ந்திருக்கின்ற அந்த சிம்மாசனம் இருக்கிறதே, அது மிக உயர்ந்த சிம்மாசனம். அதில் சில களங்கங்கள் எல்லாம் ஏற்பட்டுவிட்டன. அதைக் கொஞ்சம் தூய்மைப்படுத்தி, இந்த உயர்வான சிம்மாசனத்தில், இந்த உயர்வான இடத்தில் இருக்கிற நீங்கள், இந்தத் தமிழகத்திற்கே வழிகாட்ட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 9-50

நாங்கள் எதிர்க்கட்சியில் இருக்கிறோம். அப்படி இருப்பவர்களுக்குத்தான் நீங்கள் அதிகமான முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். ஏனென்று சொன்னால், ஆளும் கட்சியில் இருப்பவர்களை அதிகப்படியாகப் பேசவிட வேண்டியது இல்லை. அவர்கள் பேசினால், முதலமைச்சர் அவர்களையும், மற்ற அமைச்சர்களையும் பாராட்டித்தான் பேசுவார்கள். நாங்கள்தான் நாட்டு நடப்பு பற்றிய எல்லா பிரச்சினைகளையும் எடுத்துச் சொல்கின்ற அளவுக்கு இருக்கிறோம். எதிர்க்கட்சிகளுக்குத்தான் அந்தப் பொறுப்பு இருக்கிறது. ஆகவே, இந்த அவையின் முழு நேரத்தில் எதிர்க்கட்சிகளுக்கு முக்கால் பகுதியையும், கால் பகுதி நேரத்தை ஆளும் கட்சிக்கும் ஒதுக்கினால் நல்லது என்று நான் உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நம்முடைய துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற திரு. பரிதி இளம்வழுதி அவர்களும், நானும் கடந்த சட்டமன்றத்தில் பக்கத்தில் பக்கத்தில் உட்கார்ந்திருந்தோம். அவரை அடிக்க வரும்போதெல்லாம நான்தான் பக்கத்தில் நின்று தடுப்பது. ஆனால் அவர் அந்த அடிதடி எவற்றுக்கும் பயப்படமாட்டார். அப்படி அடி வாங்கிக்கொண்டே அப்படியே சிங்கம் போல் நிற்பார். அப்படியொரு நல்ல இளைஞர். முதலமைச்சர் அவர்கள், அவரைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அவருக்கு மந்திரி வேலை வரவில்லை

என்று கூட வருத்தம் இருக்கலாம் என்று நினைக்கிறேன். உங்களுக்கு மந்திரி எல்லாம் வேண்டியதில்லை. நீங்கள் நல்ல இளைஞர். நாங்கள் எல்லாம் 20 வயதில் அரசியலைத் தொடங்கி 60 வயதில்தான் இங்கே முன்னாலே உட்கார்ந்திருக்கிறோம். உங்களுக்கு 37 வயதுதான் ஆகிறது. அதனால் எதிர்காலத்தில் மிகச் சிறந்த பதவிக்கெல்லாம் நீங்கள் வரமுடியும். அந்தப் பக்குவம் அவருக்கு இருக்கிறது. இந்த வயதிலேயே நல்ல பக்குவம் உள்ள நல்ல இளைஞர் நம்முடைய பரிதி இளம்வழுதி அவர்கள். ஒரு பக்கத்தில் அடித்துக்கொண்டிருந்தாலும் அவையை நன்றாக சிரிக்க வைத்துவிடுவார். அப்படிப்பட்ட ஒரு சிறந்த நல்ல பண்பாளர். நம்முடன் பழகுவதற்கு இனியவர். அருமையாகப் பழகுவார். அவர் இன்றைக்குத் துணைத் தலைவராக இருக்கிறார். நீங்கள் பட்ட அவஸ்தையை மறுபடியும் எங்களைப் பட வைத்துவிடாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே இந்த அவையைச் சிறப்பாக நடத்தி, தமிழகத்தில் ஒரு மிகச்சிறந்த-- நம்முடைய-- பேரவைத் தலைவர் என்ற பெயரை வாங்கி, நம்முடைய முன்னவர் அவர்கள் சொன்னதைப்போல இந்தியாவுக்கே வழி காட்டுகின்ற ஒரு சட்டமன்றமாக இதை ஆக்கவேண்டுமென்று நம்முடைய சபாநாயகர் அவர்களையும், துணைத் தலைவர் அவர்களையும் வேண்டி விரும்பி கேட்டு, நீங்கள் எல்லா நலனும் பெற்று உயர்ந்து வாழ்க என வாழ்த்தி, முடிக்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. அப்துல் லத்தீப் அவர்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழகத்தினுடைய இந்த பதினொன்றாவது பேரவைக்கு மிகப் பாரம்பரியம் உள்ள ஒரு குடும்பத்தைச் சார்ந்த தாங்கள் தலைவராகத் தேர்வு பெற்றிருப்பதை நான் என்னுடைய சொந்த முறையிலும், இந்திய தேசிய லீகின் தொண்டன் என்ற முறையிலேயும் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். நாடு விடுதலை பெற்ற பிறகு, முதல் சபாநாயகராக இந்த அவையை வழிநடத்திச் சென்ற சிவசண்முகம் பிள்ளை அவர்களுக்குப் பிறகு, பல மேதைகள் இந்த அவையைச் செவ்வனே நடத்தி வந்திருக்கிறார்கள். டாக்டர் யு. கிருஷ்ணா ராவ், செல்லப்பாண்டியன், ஆதித்தனார், புலவர் கோவிந்தன், நம்முடைய கே. ஏ. மதியழகன், முனு ஆதி போன்ற மாமேதைகள் இந்த அவையை நடத்தியிருக்கிறார்கள்.



நீங்கள், தமிழகத்தின் தன்மானத்தை உயர்த்தி, சுயமரியாதையோடு வாழவேண்டுமென்று தொடங்கப்பெற்ற ஒரு மாபெரும் இயக்கத்தின் வித்தகரில் ஒருவர். தமிழகத்தில் நீதிக்காகக் குரல் கொடுத்த மாமேதைகளில் ஒருவர். ஜஸ்டிஸ் கட்சியை உருவாக்கி, தமிழர்களைச் சிந்திக்க வைத்த சிந்தனையாளர் ஒருவருக்குத் தனயனாக உதித்தவர். ஒரு மாபெரும் பாரம்பரியத்திற்குச் சொந்தக்காரர். அப்பேர்ப்பட்ட தாங்கள் இந்த அவைக்கு இன்றைக்குத் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருப்பது இங்கே அவையில் இருக்கக்கூடிய நம்மால் மட்டுமல்ல, நாடு முழுவதும் வாழ்கின்ற நல்லவர்கள், தன்மானம் உள்ளவர்கள், மொழி உணர்வு இன உணர்வு உள்ளவர்கள், தமிழகத்தில் தூய்மையான அரசியல் நடைபெறவேண்டும் என்று, அப்படிப்பட்ட அரசியலை நடத்தக்கூடியவர்கள்தான் தமிழகத்தின் உணர்வுகளை பிரதிபலிக்கக்கூடிய இந்த அவையில் இடம் பெற வேண்டுமென்று நினைக்கக்கூடிய நல்லோர்களுடைய, அனைத்து மக்களுடைய பாராட்டுக்களை நீங்கள் ஒட்டுமொத்தமாக இன்றைக்குப் பெற்றிருக்கிறீர்கள்.

முற்பகல் 9-55

உங்களிடத்தில் நிதானம் உண்டு, நல்ல விவேகம் உண்டு, ஆராயும் திறமையும் உண்டு, திறனாய்வுத் திறனும் உண்டு. அதே நேரத்தில் விவேகமான விவாதம் செய்யக்கூடிய நல்ல ஆற்றலும் உண்டு. பல அவைகளில் இடம்பெற்று நீங்கள் பெற்றிருக்கக்கூடிய பட்டறிவு தமிழகத்தினுடைய இந்த அவையை நடத்திச் செல்வதற்கு உங்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை. தமிழிலே அவை என்று சொன்னால் அது அஃறிணையில் வருகிறது என்று சொல்வார்கள். ஏனென்றால் அவை அஃறிணையில் வருகிறது. ஆனால், அஃறிணையில் வருகிற இந்த அவையில் உயர்திணையைச் சார்ந்தவர்கள்தான் நாம் அமர்ந்து இருக்கிறோம். எனவே அவை அஃறிணையில் வந்தாலும் இங்கே விவாதத்தில் கலந்துகொள்ளக்கூடியவர்கள் உயர்வான எண்ணங்களைப் பிரதிபலிக்கக்கூடிய உயர்திணையைச் சார்ந்தவர்களாக இருப்பதற்கு உங்களுடைய வழிகாட்டுதல் பெரிதும் உதவும் என்று நான் நம்புகிறேன்.

நாம் இங்கே பேசத்தான் வருகிறோம், ஏச வரவில்லை. அதை எங்களுக்கு எல்லாம் உணர்த்துகிற, அதை உணர்த்தி வழி நடத்திச் செல்கிற மாபெரும் பொறுப்பு தங்களைச் சார்ந்ததாகும். அந்தப்

[திரு. ம. அப்துல் லத்தீப்] [*1996 மே 23*

பொறுப்பை நீங்கள் செவ்வனே செய்வீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். ஏனென்றால் நாட்டிற்குப் பேசக் கற்றுக்கொடுத்த ஒரு குடும்பத்தைச் சார்ந்தவர் நீங்கள். ஏசத் தெரியாதவர்களை மட்டும் சந்தித்த குடும்பத்தைச் சார்ந்தவர் நீங்கள். பி.டி. ராஜன் என்றால் எனக்குக் கூட சிறு வயதிலிருந்து, இந்தி எதிர்ப்புக் காலம் தொட்டு அவர்களிடத்திலே ஓரளவுக்குத் தொடர்பு உண்டு. அவர்களுடைய வழி காட்டுதலில் நாம் இன உணர்வுகளைப் பெற்றிருக்கிறோம். தமிழ் இனமான உணர்வுகளைப் பெற்று, பிறகு பேரறிஞர் அண்ணா அவர்களால் வழி நடத்தப்பட்ட தமிழர்கள் மொழி உணர்வோடும், இன உணர்வோடும், தமிழகத்தில் தலைநிமிர்ந்து நிற்க வேண்டும் என்பதற்குப் பிற்காலத்தில் உருவான உற்சாகமான, உத்வேகமான நம்முடைய இயக்கங்கள், இந்த நாட்டில் தோன்றி செயல்படுவதற்கு உங்களுடைய தந்தையார் அளப்பரிய சேவையைச் செய்திருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். திரு.ஜி.டி. நாயுடு போன்றவர்களோடு எல்லாம் இணைந்து, சி.பா. ஆதித்தனார், கருமுத்து தியாகராச செட்டியார் போன்றவர்கள் எல்லாம் உடனிருந்து, எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று இருக்க வேண்டும், பிறமொழி ஆதிக்கம் தமிழகத்தில் அறவே இருக்ககூடாது என்று குரல் கொடுத்த, அந்தக் கடமையுணர்வு உள்ள இனமானத் தலைவர்களில் ஒருவரான பி.டி. ராஜன் அவர்கள் உங்களுடைய தந்தையார் என்பதை நாங்கள் ஒருபோதும் மறந்துவிட மாட்டோம்.

இந்த அவையை நாம் இப்போது பார்க்கிறோம். இந்த அவையில் இளைஞர்கள் இருக்கிறார்கள், நடுவயதினர்கள் இருக்கிறார்கள். அதே நேரத்தில் தமிழகத்தினுடைய சட்டமன்ற வரலாற்றில் முழுநேரமும் இடம்பெற்ற முத்தமிழ் அறிஞர்களும் இந்த அவையிலே உட்கார்ந்து இருக்கிறார்கள். டாக்டர் கலைஞர் அவர்கள்-- நான் எண்ணிப் பார்க்கிறேன்-*1957*-ல் முதன்முதலாக இந்த சட்டமன்றத்தில் உறுப்பினர் என்ற முறையில் அவர்கள் வந்த காலம் தொட்டு இன்று வரையில் கலைஞர் இல்லாத சட்டமன்றமே இல்லை. .அவர் ஒருசில நேரங்களில் இல்லாமல் போனால், கண்ணியம் எப்போது எப்போதெல்லாம் சட்டமன்றத்தில் இல்லாமல் போனதோ அப்போது தான் கலைஞர் இல்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆனால் கண்ணியம் இருக்கிற நேரத்திலே எல்லாம் கலைஞர் இருந்தார், பேராசிரியர் இருந்தார், நம்முடைய நாஞ்சிலார் போன்ற பெருந்தலைவர்கள் இருந்தார்கள் என்ற வரலாற்றுக்குச் சொந்தக்காரர்கள் இங்கே வீற்றிருக்கிறார்கள்.



*1996 மே 23*] [திரு. ம. அப்துல் லத்தீப்]

முற்பகல் *10-00*

நீங்கள் இந்த அவையின் இருக்கையிலே, மேலான இருக்கையிலே-- இதை நம்முடைய நண்பர் பாலகிருஷ்ணன் அவர்கள் சிம்மாசனம் என்றார்கள், சிம்மாசனமே வேண்டாம். சிம்மாசனம் இருந்தால்தான் நாட்டில் பல தொல்லைகள் ஏற்படுகின்றன, அந்தத் தொல்லைகள் வந்தாலே எல்லைகள் மீறுகின்ற நிலையிலே தமிழகம் அலைக்கழிக்கப்பட்டு விட்டது. எனவே, மக்களுடைய எண்ணங்களைப் பிரதிபலிக்கக்கூடிய ஒரு மேலான இருக்கையிலே அவர்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கக்கூடிய ஒரு மேலான இருக்கையிலே- நீங்கள் இன்றைக்கு அமர்ந்து இருக்கிறீர்கள். தமிழிலே எது எது மேலானதாகக் கருதப்படுகிறதோ, மேன்மை உடையதோ, மாண்புமிகு என்று உணர்த்தப்பட்டு இருக்கிறதோ, அவைகளை எல்லாம் பிரதிபலிக்கக்கூடிய ஒரு மாமேதையாக, நம் அனைவருடைய உணர்வுகளின் பிரதிபிம்பமாக, தாங்கள் இங்கே அமர்ந்து இருக்கிறீர்கள்.

ஸ்பீக்கர் என்று சொன்னால், யார் அவையிலே பேசுவது இல்லையோ, அவர்தான் ஸ்பீக்கர். ஒரே ஒரு ஸ்பீக்கர், அவையிலே பேசாத ஒருவர். பேசாத ஒருவர் என்றால், கட்சி பேதாபேதங்களுக்கு அப்பாற்பட்டு, இந்தக் கட்சியா, அந்தக் கட்சியா என்றெல்லாம் தன்னை இனம் காட்டிக் கொள்ளாமல், நடுநிலையில் நின்று, இந்த அவையை நடத்திச் செல்வது தொடர்பான விஷயங்களை மட்டும் பேசி, மற்ற எந்த விஷயத்தையும் பேசாமல் இருக்கக்கூடியவர்தான் ஸ்பீக்கர் என்று சொல்கிறார்கள்; மிகக் கடினமான வேலை.

இங்கேகூட ஒரு மரபு கடைப்பிடிக்கப்பட்டது. இப்பொழுது, ஒரு பக்கம் ஆளும் கட்சி சார்பாக அவை முன்னவர் அவர்கள், உங்களுடைய ஒரு கையைப் பிடித்துக் கொண்டார்கள், எதிர்க்கட்சிகள் சார்பாக, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கையைப் பிடித்துக் கொண்டார்கள். இது இங்கிலாந்து நாட்டிலேயிருந்து கடைப்பிடிக்கப்படும் நடைமுறை. யார் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ, அவர்கள் வழி கிடைத்தால் ஓடிவிடுவார்களாம். இந்தப் பதவி வேண்டாம் என்று அவர்கள் ஓடிவிடுவார்களாம். எனவேதான், ஆளும் கட்சிக்காரர்களும், எதிர்க்கட்சிக்காரர்களும், இரண்டு பேர்களும் இரண்டு கைகளை உறுதியாகப் பிடித்துக் கொண்டு உட்கார வைப்பது ஒரு மரபு என்பது தாங்கள் அறியாதது அல்ல. கடந்த காலத்தில் இது நடக்கவில்லை. நீங்கள் கூட *5* ஆண்டுக் காலத்திலே அந்த உணர்வைப் பெற்றுத்தான் இங்கே வந்து அமர்ந்து இருப்பீர்கள் என்று நான் கருதுகிறேன்.

ஆனால், நாங்கள் உறுப்பினர்கள் என்ற முறையிலே என்னுடைய சார்பாக மட்டுமல்ல, இங்கே வந்திருக்கக்கூடிய அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களுடைய சார்பாகவும், தங்களுக்குத் தெரிவித்துக் கொள்வது, உங்களுக்கு உரிய கண்ணியத்தை. இந்த அவைக்குரிய கண்ணியத்தை ஒருக்காலும் உறுப்பினர்களாகிய நாங்கள் மீறமாட்டோம். காரணம் என்னவென்றால், மீற எங்களுக்குத் தெரியாது. அதனால் நாங்கள் மீறமாட்டோம் என்பதை மட்டும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் தந்தையார் இந்த அவையிலே இடம் பெற்றபோது. 'The Hon'ble Member, The Hon'ble Minister' என்றுதான் சொல்வார்கள். அன்றைக்கு ஆங்கிலத்திலேதான் விவாதங்கள் எல்லாம் நடைபெறும். தங்களுடைய தந்தையார் இடம் பெற்ற அந்தக் காலகட்டத்தில், இந்த அவையிலே எல்லா விவாதங்களும் - ஏறக்குறைய ஆங்கிலத்திலேதான் நடைபெறும். அப்போது Hon'ble, Hon'ble என்று ஒவ்வொரு தடவையும், அமைச்சர்கள் பேசினாலும், உறுப்பினர்கள் பேசினாலும், 'ஹானரபிளாக' பேசுவார்கள். 'ஹானரபிள்' என்று குறிப்பிட்டுப் பேசுவார்கள். அந்த மரபு இந்த அவையிலே கட்டிக் காக்கப்பட்டு வரப்பட்டிருக்கிறது.

இங்கே நாங்கள் சொற்போர் செய்வதற்குத்தான் வருகிறோம். சொற்போர் செய்கிற இடம் இந்த இடம், சட்டமன்றம். மற்போர் செய்வதற்கு நீங்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டீர்கள். அப்படி நீங்கள் அனுமதிப்பதா, கூடாதா என்ற அளவுக்கு, நீங்கள் ஒரு உத்தரவைப் போடக் கூடிய அளவுக்கு அந்தக் கட்டாயத்திற்கு ஒருபோதும் நாங்கள் உங்களை ஆளாக்கமாட்டோம். நீங்கள் எங்களைக் கண்ணியத்துடன் நடத்துவீர்கள், நாங்கள் உங்களைக் கண்ணியமான இடத்திலே வைத்துப் பாராட்டுவோம். அப்பேர்ப்பட்ட ஒரு பெருந்தகை, பி.டி. ராஜன் அவர்கள் பெற்றெடுத்த நன்முத்து, திராவிட இயக்கத்திற்கு மட்டுமல்ல, சுயமரியாதை இயக்கத்திற்கு மட்டுமல்ல, எங்கும் நீதி, எதனிலும் நீதி வேண்டும் என்று குரல் கொடுத்த நல்லோர்கள் உருவாக்கிய. ஒரு கட்சியை உருவாக்கிய பெருந்தலைவர் பி.டி. ராஜன் அவர்களுடைய செல்வனாக, இந்த அவையினுடைய செல்வமாக, நாங்கள் தேர்ந்தெடுத்த நன்முத்தாக இந்த அவையின் பாரம்பரியத்தைக் கட்டிக்காக்கக்கூடிய மிகப் பெரிய பாதுகாவலராக நீங்கள் இருப்பீர்கள், இருக்க வேண்டும் என்று நான் வாழ்த்துகிறேன்; விருப்பத்தைத்



தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுக்கு எங்களுடைய ஒத்துழைப்பைத் தர நாங்கள் எப்போதும் தயார் என்பதை, அனைத்துக் கட்சிகள் சார்பாகவும், தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பரிதி இளம்வழுதி அவர்கள் கூட அரசியல் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுடைய தந்தையை நான் மிக நன்றாக அறிவேன். அவர்களும் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மிகப் பெரிய தொண்டராக, தலைவராக விளங்கியவர். அப்பேர்ப்பட்டவர் பெற்றெடுத்த நம்முடைய அருமை நண்பர், அருமைத் தம்பி, இளைஞர் பரிதி இளம்வழுதி அவர்கள் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள்.

*முற்பகல் 10-05*

இக்கட்டான நேரங்களில் எல்லாம் மிகக் கட்டுப்பாடாக இருந்து, உங்களுக்குத் துணையாக இருக்கக்கூடியவர், பரிதி இளம்வழுதி அப்பேர்ப்பட்டவர் இந்தச் சபையினுடைய துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். நீங்கள் முழு நேர ஸ்பீக்கர், பேசாதவர். அவர் அரை நேர ஸ்பீக்கர். அவர் கொஞ்ச நேரம் கட்சிக்காகவும் பேசுவார், கொஞ்ச நேரம் இந்த அவையையும் வழி நடத்துவார். அவர் டெபுடி ஸ்பீக்கர் என்ற முறையிலே இங்கே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். தனியாக இருந்து அவர் நடத்திய போராட்டத்தையெல்லாம் நாம் நன்கு அறிவோம். அப்பேர்ப்பட்ட ஒரு நல்ல இளைஞர், வல்லமை, வலிமை மிக்க இளைஞர், நல்லவர், வல்லவர். அவர் இங்கே துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு இருப்பதை நான் உளமார வாழ்த்தி, வரவேற்று அவருக்கு என்னுடைய வாழ்த்துக்களை மீண்டும் தெரிவித்து விடைபெற்றுக் கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர், திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின் பேரவைத் தலைவராக ஏகமனதாகத் தேர்தெடுக்கப்பட்டிருக்கிற உங்களைப் பாராட்டி பேரவையினுடைய அவை முன்னவர் அவர்கள் முன் மொழிந்திருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் வழிமொழியக் கடமைப்பட்டிருக்கிறேன். பேரவைத் துணைத் தலைவர் அவர்களும்

ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு அவருக்கும் எங்களது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் வாழ்த்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மிகப் பெரிய பாரம்பரியம் மிக்க ஒரு குடும்பத்திலிருந்து வந்தவர், இங்கு சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளர். நல்ல கல்விமான், சிறந்த வழக்கறிஞராக இருந்து இங்கே பணியாற்றியவர்கள்.

அதோடு மட்டுமல்லாமல், சட்டமன்றத்தினுடைய குழுத் தலைவராக பல தடவை இருந்து, கூட்டுறவு அமைப்புக்களினுடைய தலைவராக இருந்து, நீண்டகாலமாக மக்களுடைய சேவைகளிலே முழுமையான கவனம் செலுத்தியிருக்கிற நல்ல அனுபவம் மிக்க ஒரு தலைவரான உங்களை இந்தச் சட்டமன்றத்தினுடைய தலைவராகத் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள். அதே போன்று பல்வேறு நாடுகளுக்குச் சென்று நல்ல அனுபவங்களைப் பெற்று வந்துள்ளவர்தான் நம்முடைய சட்டப் பேரவையினுடைய தலைவராக இன்றையதினத்திலே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

குறிப்பாக, சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் இதே மாமன்றத்திலே சபாநாயகரைத் தேர்ந்தெடுக்கின்ற அந்த நிகழ்ச்சியிலே நான் கலந்துகொண்டிருக்கின்றேன். மலர் தூவி, மண்டியிட்டிருக்கின்ற கதை எல்லாம், இந்தச் சபையினுடைய மரபுகளுக்கு மாறாக நடந்திருக்கிற நிகழ்ச்சிகளையெல்லாம் நானும், தம்பி மாண்புமிகு உறுப்பினர், துணைத் தலைவராக இருக்கிற பரிதி இளம்வழுதி அவர்களும் பார்த்துக்கொண்டிருந்தோம். இப்போது அதற்கெல்லாம் மாறாக எளிய முறையில் இந்த மாமன்றத்தினுடைய இறையாண்மையைப் பாதுகாக்கின்ற வகையில் ஒரு தலைவர் இன்றையதினத்திலே இந்த மாமன்றத்தில் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நீங்கள் செயலாற்ற இருக்கிறீர்கள்.

குறிப்பாக, சுவையான நிகழ்ச்சிகளிலும், சூடான விவாதங்களிலும், ஆளும் கட்சிக்கு நல்ல ஆலோசனைகளை வழங்குகிறபோதுகூட, பதட்டமான சூழ்நிலை வருகிறபோது பதட்டத்தைத் தணித்து, ஒரு கட்சியால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் என்கிற அந்த முறையில் அல்லாமல் அனைத்து உறுப்பினர்களுக்கும் தலைவராக இருந்து வழி நடத்துகிற பாங்கு என்பது உங்களிடத்திலே இருக்கிறது. ஆக இந்தச் சட்டமன்றத்தினுடைய விதிமுறைகளுக்கு உட்பட்டு, அநேகமாக மாண்புமிகு முதலமைச்சர் உட்பட அனைத்து அமைச்சர் பெருமக்கள்,



அனைத்து உறுப்பினர்களுக்கும் உங்களுக்கு இருக்கிற அதிகாரம் என்பது வேறு எவருக்கும் இங்கே கிடையாது. அந்த அதிகாரங்களை முழுமையாக்கி சட்டப் பேரவை உறுப்பினர்கள் சட்டமன்றத்திலே தங்களுடைய தார்மீகமான தொகுதி மக்களுடைய கடமைகளைச் செய்கிறபோது, சில பிரச்சினைகளில் தீர்வு காண்பதற்கு உணர்வுகளை வெளிப்படுத்துகிறபோது, தாங்கள் அதை முழுமையாக அனுமதிப்பீர்கள் என்று நான் நம்புகின்றேன். அந்த வகையில்தான் இந்தச் சபைக்கு ஏற்பட்டிருக்கிற களங்கங்களை நீக்கலாம்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டது போன்று, முன்பு சட்டமன்றக் கூட்டத்தில் நாங்கள் இந்த அவையிலே அமர்ந்திருக்கிறபோது, இந்த அவையினுடைய அப்போதைய தலைவர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். நான் வளைந்திருக்கிற செங்கோலை நிமிர்த்துவேன் என்று சொன்னார். ஆனால் உட்கார்ந்து இந்த அவையினுடைய சார்பாக அனைத்து உறுப்பினர்களும் வாழ்த்துரையை வழங்குகிறபோது, இந்த வளைந்திருக்கும் செங்கோலை நிமிர்த்துகிறேன் என்ற பெயரால் முறித்த காட்சியை எல்லாம் எனக்கு அருகில் அமர்ந்திருந்த பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களும் பார்த்தார்கள், அதையெல்லாம் நாங்களும் பார்த்தோம். அந்த வகையிலே இல்லாமல் ஒரு பாரம்பரியம் மிக்க இந்தச் சபையினுடைய மரபுகளைப் பாதுகாக்கின்ற முறையில் தாங்கள் தொடர்ந்து பணியாற்ற வேண்டும் என்று நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வாழ்த்தையும், நம்பிக்கையையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10–10*

அதேபோலத்தான் இங்கே நம்முடைய துணை சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்கள் எனக்கு அருகிலே சட்ட.ப்பேரவை உறுப்பினராக இருந்து செயல்பட்டவர். அநேகமாக நானும் அவரும் தொடர்ந்து தமிழ்நாட்டு மக்களுடைய பல்வேறு பிரச்சினைகளை, அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தபொழுது எல்லாம் நாங்கள் பட்டிருக்கிற பாட்டையும், அவமதிக்கப்பட்ட நிலைமையையும் நாட்டு மக்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். ஆகவே, அவர் மிகப் பெரிய அனுபவத்தோடு இங்கே துணை சபாநாயகராக வந்திருக்கிறார்கள். அவருடைய அனுபவத்தை இங்கே பயன்படுத்த வேண்டாம் என்று நான் எதிர்க்

கட்சிகளின் சார்பாக கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த நாட்களில் நாங்கள் என்ன பேசுகிறோம், என்ன சொல்லுகிறோம் என்று காது கொடுத்துக் கேட்காமல், எடுத்த எடுப்பிலே, ஆரம்பித்த அந்த வரியிலேயே முடித்து அனுப்பிய காட்சிகள் எல்லாம் இந்தச் சபையிலே நடந்திருக்கின்றன. இதற்கெல்லாம் மாற்றாக ஒரு நல்ல இலக்கணமாகத்தான் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்திருக்கிறது. பழைய சட்டமன்ற மரபுகளைக் கடைப்பிடித்து சட்டமன்றத்தினுடைய ஜனநாயகத்தையும், பத்திரிகைகளினுடைய ஜனநாயகத்தையும், இந்தப் பேரவையிலே பாதுகாக்கின்ற வகையில் தலைவர் அவர்களும் துணைத் தலைவர் அவர்களும் செயல்படுவார்கள் என்ற நம்பிக்கையை இந்த சந்தர்ப்பத்திலே கூறி, உங்களை நான் வாழ்த்துவதற்கு வயது இல்லாவிட்டாலும்கூட, உங்களுடைய அனுபவம், உங்களுடைய அரசியல் வாழ்க்கை, உங்களுடைய முதிர்ந்த அரசியல் அனுபவங்கள் இந்த அவையில் இருக்கும் அனைவருக்கும் தேவை என்ற முறையில் சபாநாயகர் அவர்களையும், துணை சபாநாயகர் அவர்களையும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வாழ்த்தி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். திருநாவுக்கரசு.

***திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த மாமன்றத்தின் பேரவைத் தலைவராக தாங்கள் ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டிருப்பதை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலேயும் என் சார்பிலேயும், உளப்பூர்வமாக மனப்பூர்வமாக வரவேற்று உங்களுக்கு என்னுடைய இதய பூர்வமான நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல அன்பிற்குரிய சகோதரர், சட்டமன்றத்தின் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற மாண்புமிகு பரிதி இளம் வழுதி அவர்களுக்கும் எனது இதயபூர்வமான நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 10-15*

இந்த மாமன்றம் வரலாற்றுச் சிறப்பு மிக்கது. நீங்கள் அமர்ந்திருக்கிற நாற்காலி அதைவிட மிகுந்த வரலாற்றுச் சிறப்புடையது. 1922ல் சென்னை மாகாண கவுன்சில் என்று இருந்த காலத்தில், வெலிங்டன் பிரபு அவர்களாலும், அவருடைய துணைவியாராலும் பரிசாக



அளிக்கப்பட்ட நாற்காலி என்று, இந்த நாற்காலியைப் பற்றிச் சொல்வது உண்டு. ஒருவேளை ஆங்கிலேயர் இந்த நாட்டை ஆண்டு போனதற்கு பின்னாலேயும் பிரிட்டிஷ் பாராளுமன்ற முறையை இந்திய பாராளுமன்றத்திற்கும் சட்டமன்றங்களுக்கும் பயன்படுத்துகிற காரணத்தாலேயும் இந்த நாற்காலி ஒரு அடையாளச் சின்னமாக, எப்படி ஜனநாயக ரீதியாக பிரிட்டிஷ் பாராளுமன்ற முறை நடைபெறுகிறதோ, அது போல ஜனநாயக ரீதியாக நடைபெறவேண்டும் என்பதற்காக ஓர் அடையாளச் சின்னமாக இந்த நாற்காலி இருப்பதாக நான் கருதுகிறேன். அந்தச் சிறப்புமிக்க நாற்காலியில் புகழும் சிறப்பும் மிக்க நீதிக் கட்சி, திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், போன்ற இப்படி தொடர்ந்து திராவிட இயக்கத்தில் தொண்டு செய்து வந்திருக்கிற, பாடுபட்டு வந்திருக்கிற முன்னணித் தலைவராக வந்திருக்கின்ற அந்தக் குடும்பத்திலே பெரியவர் திரு. பி.டி. ராஜன் அவர்களுடைய இரண்டாவது மகனாகப் பிறந்து இந்தப் புகழ்மிக்க நாற்காலியில், புகழ்மிக்க நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். ஏற்கெனவே இருமுறை 1967லேயும் 1971லேயும் சட்டமன்ற உறுப்பினராக இருந்து பணியாற்றிய அனுபவம் உங்களுக்கு உண்டு. பட்டதாரிகள் தொகுதியிலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமன்ற மேலவையிலேயிருந்து பணியாற்றிய அனுபவமும் உங்களுக்கு உண்டு சட்டமன்ற மேலவையிலே நீங்கள் உரையாற்றிய காலங்களில் அமைச்சராக இருந்து உங்களுடைய ஆங்கில உரையையும் தமிழ் உரையையும் முழுவதுமாகக் கேட்டிருக்கிறேன். இன்னும் சொல்லப்போனால் சில நேரங்களிலே சில பேர் பேசுகின்றபோது மட்டும் நான் வந்து உட்கார்ந்து முழுவதுமாகக் கேட்பதுண்டு. அப்படி நீங்கள் மேலவையிலே உரையாற்றுகின்ற நேரத்திலே எல்லாம் நான் வந்து அமர்ந்து முழுவதுமாக உங்களுடைய உரையைக் கேட்டிருக்கிறேன். அதற்குக் காரணம் ஆங்கிலத்திலேயும் சரி, தமிழிலேயும் சரி மிக அற்புதமாக அழகாக பேசக்கூடியவர் என்பது மட்டுமல்ல, மிகுந்த பண்பாட்டோடும் நாகரீகத்தோடும் பேசக்கூடியவர். தனிப்பட்ட முறையிலேயும், எனக்கு முன்னாலே வாழ்த்தியத் தலைவர்கள் எல்லாம் சொன்னதுபோல, நயத்தகு நாகரீகமும் மிகச் சிறந்த பண்பாடும் நிறைந்தவர் நீங்கள். எனவே, அந்த புகழ்மிக்க நாற்காலியில் மிகச் சிறந்த பண்பாளரான நீங்கள் அமர்ந்திருப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் பெருமையையும் தருகிறது.

இந்த நாற்காலியில் ஸ்பீக்கர் மிஸ்டர் சாம்பமூர்த்தி, திரு. சிவசண்முகம் பிள்ளை, திரு. கோபாலமேனன், டாக்டர் யு. கிருஷ்ணா

ராவ், திரு. செல்லபாண்டியன், திரு. ஆதித்தனார், புலவர் கோவிந்தன், திரு. மதியழகன், திரு. முனு ஆதி, திரு. இராஜாராம், திரு. பி.எச். பாண்டியன், எதிரே உட்கார்ந்திருக்கிற டாக்டர் தமிழ்க்குடிமகன், திரு. சேடப்பட்டி முத்தையா இப்படி பலபேர் இந்த நாற்காலியிலே உட்கார்ந்திருக்கிறார்கள். இவர்களிலே எந்தெந்த சபாநாயகர்கள் எல்லாம் சட்டசபை மரபுகளுக்கும் கண்ணியங்களுக்கும் ஏற்ப இந்தச் சட்டசபையை நடுநிலையோடு நடத்தினார்களோ அவர்களையெல்லாம் முன்னுதாரணமாக எடுத்துக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சபையை நீங்கள் சிறப்பாக நடத்துவீர்கள் என்கிற நம்பிக்கை எனக்கு உண்டு.

1977லே நான் அரசியல் ஆசானாகப் போற்றுகின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், அருமை அண்ணன் முனு ஆதி அவர்களை சபைத் தலைவராக அமர வைத்து வாழ்த்துரை வழங்குகின்றபோது, எங்களைப் பொறுத்தவரை, அதாவது ஆளும் கட்சியைப் பொறுத்தவரை, அவைத் தலைவர் அவர்களுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் சஞ்சலமோ, சங்கடமோ, குழப்பமோ ஏற்படாத வகையில் ஒத்துழைப்பு தருவோம் என்று சொன்னார். அதேமாதிரி இப்போது இருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களும் உங்களைப் பரிபூரண சுதந்திரத்தோடு, நடுநிலையோடு செயல்படவிடுவார்கள் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. பல்வேறு அரசியல் தொடர்புகள் உங்களுக்கு உண்டு. நான் சொன்னமாதிரி சட்டமன்றங்களிலே, மேலவையிலே மட்டும் அல்லாமல் பல்கலைக்கழக ஆட்சிமன்றக் குழுவிலே, கூட்டுறவுச் சங்கங்களிலே, சட்டமன்றத்தின் பல்வேறு குழுக்களிலே, ரோட்டரி சங்கம் போன்ற பல்வேறு சமூக அமைப்புகளிலே இப்படி பலவற்றிலே நீங்கள் பொறுப்பேற்றுத் தலைவராக இருந்திருக்கிறீர்கள். 1925 ஆம் ஆண்டு திரு. வி. ஜே. பட்டேல் அவர்கள்-- சுயராஜ்ய கட்சியினுடைய பெரிய தலைவராக இருந்த ஒருவர்-- சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடனே, அவர் சொன்னார்; 'From this moment I cease to be a Party-man, I belong to no party, I belong to all parties, I belong to all of you'.

"நான் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த நேரம் முதல் எந்தக் கட்சியையும் சார்ந்தவன் அல்ல; எல்லா கட்சிகளுக்கும் பொதுவானவன்; எல்லா கட்சிகளையும் சேர்ந்தவன்; இங்கே இருக்கின்ற உங்கள் எல்லோருக்கும் நான் பொதுவானவன்; உங்கள் அனைவரையும் சேர்ந்தவன்" என்று சொன்னார். இதைக்கூட எதிரே, இன்றைக்கு வருவாய்த் துறை அமைச்சராக இருக்கின்ற நாஞ்சிலார் அவர்கள்,



அன்றைக்கு அவை முன்னவராக இருந்து ஏறத்தாழ 19 ஆண்டுகளுக்கு முன்னாலே படித்துக் காட்டியதை, சுட்டிக்காட்டியதை இந்த மன்றத்திலே நான் மீண்டும் நினைவுகூர்கிறேன். எனவே, கட்சிகளுக்கு அப்பாற்பட்டு நடுநிலையோடு இந்தச் சபையை நீங்கள் நடத்துவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு மனப்பூர்வமாக இருக்கிறது.

முற்பகல் 10-20

அருமை அண்ணன் திரு. லத்தீப் அவர்கள் பேசும் போது ஆளுங்கட்சியின் சார்பிலே முன்னவரும், எதிர்க்கட்சியின் சார்பிலே எதிர்க்கட்சித் தலைவரும் இருபுறத்திலே இருந்து உங்களை அழைத்துக்கொண்டு போய் கையை பிடித்துக்கொண்டு போய் உட்கார வைப்பது நீங்கள் தப்பித்து ஓடிப் போகாமல் இருப்பதற்காகத்தான் என்று சொன்னார்கள். நான் அப்படி கருதவில்லை. ஆளுங்கட்சியின் சார்பிலே முன்னவரும், எதிர்க்கட்சித் தலைவரும் ஆளுக்கு ஒரு பக்கமாக கையை பிடித்துக்கொண்டு போய் உங்களை உட்கார வைப்பது, நீங்கள் எந்தப் பக்கத்திலேயும் சாய்ந்து விடாமல், நடுநிலையோடு எப்போதும் தொடர்ந்து செயல்படவேண்டும் என்பதற்காகத்தான். இருபுறத்திலேயும் இருவருக்குமே நீங்கள் பொதுவானவர்கள், சமமானவர்கள், இருபுறத்தையும் நீங்கள் கவனித்துக்கொள்ளுங்கள், பார்த்துக்கொள்ளுங்கள், நடுநிலையோடு செயல்படுங்கள் என்பதற்காகத்தான் இந்த மரபை அந்தக் காலத்திலே தோற்றுவித்து இருப்பார்கள் என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். எனவே, எங்களுடைய எதிர்பார்ப்புக்கு ஏற்ப இந்த சபையை நீங்கள் நடுநிலையோடு நடத்துவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. எனவே, உங்களுக்கு என்னுடைய இதயபூர்வமான நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எல்லாவிதமான ஒத்துழைப்பையும்-- இந்தச் சபை கண்ணியத்தோடும், மரபோடும், பண்போடும் நடைபெறுவதற்கு அனைத்து விதத்திலேயும் தருவோம் என்பதை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்றக் கட்சியினுடைய தலைவர் என்ற முறையில் தெரிவித்துக் கொள்கிறேன். நாங்கள் எண்ணிக்கையிலே நால்வராக இருந்தாலும் தமிழ்நாட்டிலே உண்மையான எதிர்க்கட்சி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான். தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி உங்களுடைய தோழமைக் கட்சி. இந்திய கம்யூனிஸ்டு கட்சி உங்களுடைய தோழமைக் கட்சி. அதேபோல் அருமை அண்ணன் திரு. லத்தீப் அவர்கள்

தலைவராக இருக்கிற இந்திய தேசிய லீக் உங்களுடைய தோழமைக் கட்சி. அகில இந்திய பார்வர்டு பிளாக் உங்களுடைய தோழமைக் கட்சி. ஆக, உண்மையான எதிர்க்கட்சி என்பது என்னிலிருந்துதான் துவங்குகிறது. எனவே, இந்தப் பக்கத்திலே இருக்கிற எங்களுக்கு எல்லாம் அதிகமான வாய்ப்புகளை, உரிய வாய்ப்புகளைத் தந்து இந்தச் சபையை நீங்கள் நடத்துவீர்கள் என்ற நம்பிக்கையோடு அனைத்துவிதமான ஒத்துழைப்பையும் உங்களுக்குத் தருவதற்கு நான் உறுதி அளிக்கிறேன்.

அதேபோல், துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற சகோதரர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் நான்காவது முறையாகச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இதிலே அவர் ஆளுங்கட்சியில் இருந்தது 2½ ஆண்டுகள்தான், 1989-லிருந்து 1991 வரை. ஏறக்குறைய 9 ஆண்டுகள் எதிர்க்கட்சியிலே இருந்துதான் செயல்பட்டிருக்கிறார். அதிலும் சில ஆண்டுகள் என் பக்கத்திலே இருந்து செயல்பட்டிருக்கிறார். ஆக, என்னைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய 9 ஆண்டுக் காலம் எதிர்க்கட்சி வரிசையிலே இருந்து செயல்பட்டிருக்கின்ற சகோதரர் திரு. பரிதி இளம்வழுதி அவர்களுக்கு எதிர்க்கட்சிகளை எல்லாம் எப்படி நடத்த வேண்டும் என்று மிக நன்றாகத் தெரியும். என்னைப் பொறுத்தவரையில் நம்முடைய தமிழ் மாநில காங்கிரஸ் இயக்கத்தின் முன்னணித் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான அன்பிற்குரிய திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப் போல திரு. பரிதி இளம்வழுதி துணை சபாநாயகராக ஆனதற்குப் பதிலாக அமைச்சராக ஆகியிருந்தால் நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருப்பேன். ஏன் என்றால் நான்காவது முறையாக இந்த மன்றத்திலே இடம் பெற்றிருக்கிறார். முன்னவர், நம்முடைய மாண்புமிகு அவர்கள் சொன்னது போல் 5 ஆண்டுகள் என்னோடு இங்கே இருந்திருக்கிறார். எனவே, அவர்களும் இந்தச் சபையை மிகுந்த நடுநிலையோடு நடத்துவார்கள் என்ற மனப்பூர்வமான நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இதிலே சபையினுடைய துணைத் தலைவரைப் பொறுத்தவரையில், ஜூலை 6 ஆம் தேதி 1977-லே, அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த இப்போதைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'துணைத் தலைவரைப் பொறுத்தவரையில் அண்ணா அவர்கள் இருந்தபோது இந்தப் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்க முன்வந்தார்கள். அந்த முறையை இப்போது கடைப்பிடிக்கவில்லை; அதற்காக நான் வருத்தப்படவில்லை' என்றார்கள் 1977-லே எதிர்க்கட்சியினராக



இருந்தபோது; அதையே நானும் சொல்கிறேன். நாங்கள் வருத்தப்படவில்லை, ஏன் என்றால் அந்தப் பதவி எங்களுக்குக் கிடைக்கப் போவதும் இல்லை; கிடைத்தாலும் ஏற்றுக்கொள்ளப் போவதும் இல்லை. ஆனால் காங்கிரசுக்கு அந்த வாய்ப்பு தரப்பட்டதா; இல்லையா; எனக்குத் தெரியாது. இருந்தாலும் துணைத் தலைவராக பொறுப்பு ஏற்று இருக்கிற திரு. பரிதிக்கு மீண்டும் என் வாழ்த்துக்களைச் சொல்லி எங்களுடைய முழு ஒத்துழைப்பைத் தருவோம் என்று கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போற்றுதலுக்குரிய சிறப்பு வாய்ந்த பாரம்பரியத்தைக் கொண்டிருக்கிற தமிழ்நாடு சட்டமன்றத்தில் இன்றைக்கு ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அவைத் தலைவர் அவர்களுக்கும், அவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சார்பிலேயும், என் சார்பிலேயும், எங்களுடைய உறுப்பினர்கள் சார்பிலேயும் நெஞ்சார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். அவைத் தலைவராகத் தேர்வு பெற்றுள்ள தாங்கள், பல தலைவர்களும் சுட்டிக்காட்டியபடி சமூக நீதி காக்க பார்ப்பனர் அல்லாதார் இயக்கமான நீதிக்கட்சி பாரம்பரியத்திலே இருந்து தாங்கள் வந்திருப்பதன் மூலம் இந்த அவையிலே உள்ளவர்களின் சமூக நீதியையும் தாங்கள் தவறாமல் காப்பீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. தங்களுடைய தந்தையார் திரு. பி.டி. ராஜன் அவர்கள் நீதிக்கட்சி ஆட்சிக் காலத்திலே அமைச்சராக இருந்து இந்த நாட்டு மக்களுக்கு நல்ல பல தொண்டுகளைச் செய்தவர். அந்தப் பாரம்பரியத்திலே வந்த தாங்களும் சுயமரியாதை இயக்கத்திலேயும், திராவிட இயக்கங்களிலேயும் பல்வேறு பொறுப்புகளை ஏற்று சிறப்பாக இந்த நாட்டிற்குப் பல பங்களிப்புகளைச் செய்திருக்கிறீர்கள் என்பதை நாங்கள் அறிவோம். அந்த அடிப்படையிலே உங்களை வாழ்த்தி, வணங்கி அவைத் தலைவராக தங்களை வரவேற்பதிலே நாங்கள் மகிழ்ச்சியும் எங்களுடைய நல்லெண்ணத்தை தெரிவித்துக் கொள்வதிலே பெருமிதமும் அடைகிறோம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். சுயமரியாதை இயக்கத்திலே இருந்து வந்த

52/174-4

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [*1996 மே 23*

காரணத்தினாலே தாங்கள் இந்த மன்றத்திலே உள்ளவர்களுடைய சுயமரியாதைக்கு எந்தவித பாதிப்பும் பங்கமும் வராத அளவிற்கு நெறியோடு இந்த அவையை நடத்திச் செல்வீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. வழக்கறிஞராக இருந்து தாங்கள் இன்றைக்கு இந்த அவையினுடைய நீதிபதியாக, அவைத் தலைவராக உருவாகி இருக்கிறீர்கள். இந்தச் சிறப்பு வாய்ந்த பொறுப்பிலே இருந்து கொண்டு, ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற பாகுபாடு இல்லாமல்,

> "சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
> கோடாமை சான்றோர்க் கணி"

என்ற அந்த சான்றாண்மைக்கு ஒப்ப, போதிய வாய்ப்புகளை எதிர்க் கட்சிகளுக்கும் நீங்கள் நல்குவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. ஏனென்று சொன்னால், இந்த அவையிலே இதற்கு முன்னாலே நடைபெற்ற சம்பவங்களை நாங்கள் வெளியிலே இருந்து படித்தவர்கள். இப்பொழுதுதான் எங்களுக்கு முதன்முதலாக இந்தச் சட்டமன்ற நுழைவு வாய்ப்பு கிடைத்து இருக்கிறது. அப்படிப் பார்க்கிறபொழுது, மக்களுடைய வரிப்பணத்திலே இயங்கக்கூடிய இந்தச் சட்டப்பேரவையானது மக்களுக்கான திட்டங்களையும் சட்டங்களையும் நிறைவேற்றுவதற்குப் பதிலாக வெறும் சத்தமன்றமாக மாறிவிடக்கூடாது என்பதற்காக நாங்களும் எங்களுடைய கட்சி உறுப்பினர்களும் உங்களுக்கு எல்லா வகையிலும் ஒத்துழைப்பாக, உறுதுணையாக, இந்த அவையினுடைய கண்ணியமும், இந்த அவையினுடைய கட்டுப்பாடும் காக்கப்படுவதற்காக எங்களுடைய ஒத்துழைப்புகளை மிகச் சிறப்பாகவே வழங்குவோம் என்பதையும் இந்த நேரத்திலே நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் *10-30*

வளைந்த செங்கோலைத் தன்னுடைய இன்னுயிரையும் நீத்து நிமிர்த்திக் காட்டிய அந்த மாமதுரையிலேயிருந்து தாங்கள் வந்திருக்கிறீர்கள். எனவே, கடந்த காலத்திலே ஏதேனும் குறைகள் இந்த அவையிலே இருக்குமேயானாலும்கூட அந்தக் குறைகளையெல்லாம் நீக்கி, தங்களுடைய காலத்திலே இந்த அவையானது தமிழகத்தினுடைய பெருமைகளைக் காக்கின்ற அந்த அவைத்தலைவர்களுடைய வரிசையிலே தாங்களும் இடம் பெற வேண்டுமென்ற நல்லெண்ணத்தினுடைய அடிப்படையிலே



*1996 மே 23*] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

உங்களுடைய செயல்பாடுகள் இருக்கும் என்பதை நாங்கள் நம்பிக்கையோடு தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பல துறைகளிலே இருந்து அனுபவம் பெற்றவர்கள் நீங்கள். இதே சட்டமன்றத்திலே பல குழுக்களிலே இடம் பெற்றிருக்கிறீர்கள். தமிழ்நாடு விவசாய வருமான வரித் துறை தேர்வாணைக் குழு, சட்டமன்றத் துணைக்குழு, தமிழக நகர் மற்றும் கிராமப்புற வளர்ச்சித் தேர்வு இணைக் குழு, தமிழகத் திட்டக் குழு இப்படிப் பல்வேறு பொறுப்புகளிலே நீங்கள் அங்கம் வகித்துச் சிறப்பாகச் செயல்பட்டிருக்கிற காரணத்தினாலே, இந்த அவையினுடைய சூழ்நிலைகளை மிகத் தெள்ளத் தெளிவாகவே உங்களுடைய அனுபவ ரீதியாகவும் அறிந்து வைத்திருப்பவர் என்பதை நாங்கள் நம்புகிறோம்.

அதோடு மட்டுமல்லாமல், கூட்டுறவுத் துறையிலேயும் நீங்கள் பல பொறுப்புகளை வகித்திருக்கிறீர்கள். கூட்டுறவுத் துறையினுடைய தத்துவமே, எவ்வளவுதான் வசதி படைத்த மனிதராக இருந்தாலும், ஒருவருக்கு ஒரு ஓட்டு என்பதுதான். அதேபோல, இந்த அவையிலே ஆளுங்கட்சி மிக்க வலுவானதாக இருந்தாலும், எதிர்க்கட்சி எண்ணிக்கையிலே கொஞ்சம் குறைந்திருந்தாலும், அந்தக் கூட்டுறவுத் தத்துவத்தினுடைய மொழிக்கு இணங்க, தாங்கள் சமமான வாய்ப்பினையோ அல்லது ஒரு தாய் மனப்பான்மையிலே, மெலிந்த குழந்தைக்கு ஒரு கவளம் அதிகமாகத் தருவதைப்போல, இந்த எண்ணிக்கை குறைந்த எதிர்க்கட்சிகளுக்குத் தாங்கள் அதிகமான வாய்ப்புகளைத் தர வேண்டுமென்று நான் ஒரு கோரிக்கையாக உங்கள் முன்னாலே இந்த நேரத்திலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிறந்த கல்வியாளராகவும் நீங்கள் திகழ்ந்திருக்கிறீர்கள். அதோடு வெளிநாடுகளிலெல்லாம் சுற்றி வந்திருக்கிறீர்கள். ஆயிரம் நூல்களைப் பயில்வதைக் காட்டிலும், ஆயிரம் மைல்களைப் பயணம் செய்வது மேல் என்பது சீனத்துப் பழமொழி. ஆகவே, பல நாடுகளுடைய அவைகளினுடைய அனுபவங்களையெல்லாம் அறிந்திருக்கிற தாங்கள், இந்தப் பாராளுமன்ற முறை பிரிட்டிஷாரினுடைய அடியொற்றி அமைந்த ஒரு முறையாக இருக்கிற காரணத்தினாலே, எதிர்க்கட்சிகளுக்கு மிக முக்கியத்துவம் தரக்கூடிய வகையிலே அந்த பிரிட்டிஷ் பாராளுமன்ற நடைமுறைகள் இருந்து வருகிற பொழுது தாங்களும் அதே நடைமுறையை இங்கே கடைபிடித்து இந்த அவைக்குப் பெருமை சேர்ப்பீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [*1996 மே 23*

அதிலும் குறிப்பாக, ஆளுங்கட்சியினருக்குப் பெரும்பாலும் காதையும், எதிர்க்கட்சிகளுக்குப் பெரும்பாலும் வாயையும் பயன்படுத்துகின்ற ஒரு வாய்ப்பைத் தாங்கள்தான் தரவேண்டும். அப்படித் தருகின்றபொழுதுதான் அரசினுடைய திட்டங்களையும், ஆதரவான கருத்துக்களையும் ஆளுங்கட்சியினர் பாராட்டுகிற நேரத்திலே, எதிர்க்கட்சிகள் அதிலே குறைகளைச் சுட்டிக்காட்டுகிறபொழுது, அதைச் செவி மடுக்கிற அந்த ஒரு பக்குவம் அவர்களுக்கு இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

அதேபோல, தொகுதியினுடைய குறைகளையோ அல்லது பொதுவாக நாட்டிலே காணப்படுகின்ற குறைபாடுகளையோ அல்லது தேவைகளையோ எதிர்க்கட்சியினர் சுட்டிக்காட்டுகிறபொழுது அதற்கு நிரம்ப வாய்ப்புகளை, அதாவது வாயைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளைத் தர வேண்டுமென்ற நோக்கத்திலேதான் ஆளுங்கட்சிக்குக் காதையும், எதிர்க்கட்சிகளுக்கு வாயையும் அதிகமாகப் பயன்படுத்துவதற்கு நீங்கள் வாய்ப்பு தர வேண்டுமென்ற முறையிலே நான் இந்த வேண்டுகோளை இங்கே வைக்க விரும்புகிறேன்.

அதிலும், நீங்கள் விளையாட்டுத் துறையிலேயும் ஆர்வம் மிக்கவர் என்றும், கர்நாடக சங்கீதத்திலே ஈடுபாடு உடையவர் என்றும் படித்திருக்கிறோம், கேள்விப்பட்டிருக்கிறோம். அந்த வகையிலே, கர்நாடக சங்கீதத்திலே ஈடுபட்டிருப்பவர்களுக்கு நிரம்ப சகிப்புத் தன்மை இருக்கும் என்பது பொதுவான கருத்து. ஆகவே, அந்தச் சகிப்புத் தன்மையோடு இந்த அவையினுடைய சிறப்பியல்புகளை யாரேனும் கொஞ்சம் மிஞ்சுகின்ற நேரத்திலே அவற்றைச் சகிப்புத் தன்மையோடு நீங்கள் அனுசரித்துச் செல்வீர்கள் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

*முற்பகல் 10–35*

முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டுச் சொன்னதுபோல் ஸ்பீக்கர் என்று சொல்கிறபோது, இந்த அவையிலே ஆளும் கட்சி உறுப்பினர்களும் பேசுவார்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் பேசுவார்கள் என்றாலும்கூட, ஸ்பீக்கர் என்கிற அந்தச் சிறப்பு அவைத் தலைவருக்கு மட்டுமே கொடுத்திருக்கின்ற நோக்கம் பால்களிலே எத்தனையோ பால்கள் இருந்தாலும் பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ என்று சொல்கின்ற மொழிக்கிணங்க இங்கே அனைவரும் பேசக்கூடியவர்களாக



*1996 மே 23*] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

இருந்தாலும், அவைத் தலைவர் அவர்கள் இங்கே நெறிமுறைகள் பிறழ்கிற நேரத்திலே, அந்த நெறியை கட்டுப்படுத்தக்கூடிய அளவுக்குப் பேசக்கூடிய அதிகாரம் படைத்தவர் தாங்கள்தான் என்பதனாலேதான் உங்களுக்கு அந்தச் சிறப்புப் பெயர் ஸ்பீக்கர் என்று வந்திருப்பதாக நாங்கள் கருதுகிறோம். ஆகவே, அந்தச் சிறப்பிற்கிணங்க, தங்களுடைய பாரம்பரியத்திற்கேற்ப நீங்கள் இந்த அவையினுடைய மாண்புகளை நிச்சயம் காப்பாற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. முதல் தொடக்கமே உங்களுக்கு மிகச் சிறப்பான தொடக்கமாக இருப்பதாக நாங்கள் கருதுகிறோம். பத்திரிகையிலே படித்ததன் வாயிலாக அமைச்சராக வருவீர்கள் என்றுதான் மக்களும் எதிர்பார்த்தார்கள், உங்களுடைய இயக்கத்திலும் பலபேர் எதிர்பார்த்தார்கள். ஆனால், நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்,

> "இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
> அதனை அவன்கண் விடல்"

என்ற அந்தக் குறள் மொழிக்கிணங்க தங்களை இந்தச் சிறப்பு வாய்ந்த பதவியிலே அமர்த்தியிருப்பதாக நாங்கள் கருதுகிறோம். எனவே, அப்படிக் கொடுத்த அந்தப் பொறுப்பைக்கூட, மற்றவர்களாக இருந்தால் மனக்குறைவாக எடுத்துக்கொண்டு பிரச்சினைகளை உருவாக்குவார்கள். ஆனால், தாங்களோ பண்பட்ட குடும்பம், பக்குவப்பட்ட மனது, நல்ல அனுபவம், வெளிநாடு சுற்றிய அந்த அனுபவம், இவை அனைத்தும் பெற்றிருக்கின்ற காரணத்தினாலே, கொடுத்த பொறுப்பை மனநிறைவோடு ஏற்றுக்கொண்ட, அதை மாண்போடு தாங்கள் நிறைவேற்றுவதாக ஏற்றுக்கொண்ட அந்த உங்களுடைய முதல் தொடக்கமே எங்களுக்கு மகிழ்ச்சியையும், மிகுந்த வரவேற்பையும் அளிக்கக்கூடியதாக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, மாண்புமிகு சட்டமன்றப் பேரவையினுடைய துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற மாண்புமிகு பரிதி இளம்வழுதி அவர்களும் இந்த அவையிலே ஏற்கெனவே அனுபவப்பட்டவர்கள். நல்ல படிப்பாளியாகவும் இருக்கிறார். அதே நேரத்தில் தலைசிறந்த அனுபவசாலியாகவும் இருக்கிறார். முன்னால், மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதுபோல், இந்த அவையிலே அவர் பெற்றிருக்கின்ற சில கசப்பான அனுபவங்கள் இருக்கும்.

தமிழிலே ஒரு பழமொழி சொல்வார்கள், யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று. அதேபோல யான்பெற்ற துன்பம் பெறுக இந்த அவை என்று சொல்லி, மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்கள் தங்களுடைய கசப்பான அனுபவங்களிலேயிருந்து எந்தவிதமான முன்னுதாரணங்களையும் எடுத்துக்கொள்ளக் கூடாது என்பது என்னுடைய பணிவான வேண்டுகோள். அவர் அப்படி எடுத்துக்கொள்கிறவர் அல்ல என்பதும் எங்களுடைய நம்பிக்கையான கருத்து. எனவே, சட்டமன்றப் பேரவைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற ஐயா பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்களுக்கும், மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் பரிதி இளம்வழுதி அவர்களுக்கும் மீண்டும் ஒரு முறை என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வல்லரசு.

**திரு. பி.என். வல்லரசு:** புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக இந்த மாண்புமிகு மன்றத்தினுடைய அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஆசியோடும், வாழ்த்தோடும், இன்றையதினம் புதிய சட்டமன்றப் பேரவைத் தலைவராக பொறுப்பேற்று இருக்கின்ற தங்களுக்கும், துணைத் தலைவராக பொறுப்பேற்று இருக்கின்ற திரு. இளம்வழுதி அவர்களுக்கும் நான் சார்ந்திருக்கின்ற அகில இந்திய ஃபார்வார்டு பிளாக் கட்சியின் சார்பில் எனது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழாய்ந்த தமிழறிஞர் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக வரவேண்டுமென்ற தமிழ்நாட்டு மக்களுடைய எண்ணம் ஈடேறுகின்ற நிலையில், முத்தமிழின் மொத்த உருவமாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்ற தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராகவும், சட்டம் பயின்ற, சட்ட நுணுக்கங்களை அறிந்த, சட்டமன்ற உறுப்பினராகவும், சட்டமன்றக் குழுக்களிலே இடம்பெற்றும், பல்வேறு சட்டமன்ற மரபுகளை அறிந்திருக்கின்ற தாங்கள் சட்டப் பேரவைத் தலைவராகவும் இன்றையதினம் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது அமுதும் தேனும் கலந்த ஒரு அருஞ்சுவையாக தமிழக மக்களுக்கு காணப்படுகிறது என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



முற்பகல் 10-40

தாங்கள் அமர்ந்திருக்கிற இந்த சபாநாயகர் ஆசனத்தில் அமர்ந்து இந்தியாவிற்கே சட்டமன்ற மரபுகளையும், பண்புகளையும் எடுத்துக்கூறுகின்ற அளவுக்கு பல்வேறு சபாநாயகர்கள் கடந்த காலத்தில் தலைசிறந்த முறையில் சட்டமன்றத்தை வழிநடத்திச் சென்றிருக்கிறார்கள். கடந்த கால சபாநாயகர்களான மாண்புமிகு சிவசண்முகம் பிள்ளை அவர்கள், மாண்புமிகு டாக்டர் யு. கிருஷ்ண ராவ் அவர்கள், மாண்புமிகு செல்லபாண்டியன் அவர்கள், மாண்புமிகு ஆதித்தனார் அவர்கள், மாண்புமிகு ராசாராம் அவர்கள், மாண்புமிகு தமிழ்க்குடிமகன் அவர்கள் ஆகியோரெல்லாம் தலைசிறந்த சபாநாயகர்களாக தமிழக சட்டப்பேரவையிலே விளங்கி தமிழக சட்டமன்ற மரபுகளை, பண்புகளைக் காப்பாற்றி இந்தியாவிற்கே வழிகாட்டி இருக்கிறார்கள் என்பது நீங்கள் அறியாதது அல்ல. எனவே அப்படிச் சிறப்பாக இந்த மாமன்றத்தை நடத்திச் சென்றவர்களுடைய வரலாற்றை நீங்கள் அறிந்திருப்பதோடு மதுரை மாவட்ட மக்களால் பண்பாளர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் என்ற மாபெரும் பட்டத்தோடு அழைக்கப்படுகின்ற தாங்கள் சட்டமன்ற மரபுகளை, ஏற்கெனவே சிறப்பாக வழி நடத்திச் சென்ற சபாநாயகர்கள் வழியில் நடத்திச் செல்வீர்கள் என்பதில் எனக்கு ஆழமான நம்பிக்கையுண்டு.

அதேபோன்று ஒருசில சட்டப் பேரவைத் தலைவர்கள் இந்த மாமன்றத்திலே சில சீர்குலைவுகளையும் ஏற்படுத்தி இருக்கிறார்கள். எப்படிக் கடந்த காலத்தில் இந்தியாவுக்கே வழிகாட்டுகிற அளவுக்கு பண்பாட்டோடும், சிறப்போடும் இந்த மாமன்றத்தை வழிநடத்திச் சென்றவர்களை உதாரணமாக எடுத்து பாடம் கற்றுக் கொள்கிறீர்களோ அதேபோன்று இந்த மாமன்றத்திலே சட்டமன்ற மரபுகளை சீர்குலைத்தவர்களின் நடவடிக்கைகளையும் நீங்கள் எண்ணிப் பார்த்து அதிலேயும் நீங்கள் எச்சரிக்கையாக இருக்கக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். ஒருவர், உங்களுக்கு முன்னாலே, இந்த ஆசனத்திலே அமர்ந்திருந்த சபாநாயகர் வானளாவிய பல்வேறு சீர்குலைவுகளை எல்லாம் இந்த மன்றத்திலே ஏற்படுத்தியதிலிருந்தும் பாடம் கற்றுக்கொண்டு, அவற்றைத் தவிர்த்து நல்ல பண்பாளர் என்பதை அதாவது நான் சொன்ன கடந்த கால சபாநாயகர்களைப் போன்று ஒரு பண்பாடான சபாநாயகர் என்பதை நீங்கள் நிச்சயம் எடுத்துக் காட்டுவீர்கள் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை.

[திரு. பி.என் வல்லரசு] [1996 மே 23

இந்தத் தமிழகச் சட்டமன்ற வரலாற்றில் தங்களுடைய தந்தை ஓர் அமைச்சராக இருந்தவர்கள். தாங்கள் இன்றையதினம் சபாநாயகராக ஆகி இருக்கிறீர்கள். தமிழக சட்டமன்ற வரலாற்றில் தந்தை அமைச்சராகவும், மகன் சபாநாயகராகவும் இருந்து ஒரு புதிய வரலாற்றை உருவாக்கித் தந்திருக்கிறீர்கள் என்பதை எண்ணி நான் மகிழ்கிறேன். எனவே மதுரை மக்களால் பண்பாளர் என்று போற்றப்படுகின்ற நீங்கள் தமிழக மக்களால் பண்பாளர் என்று போற்றப்படுகின்ற அளவுக்கு இந்த மன்றத்தைச் சிறப்பாக வழிநடத்திச் செல்வீர்கள் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை.

அதேபோன்று உங்களுக்குத் துணை நிற்கிற துணைச் சபாநாயகராக வந்திருக்கின்ற பரிதி இளம்வழுதி அவர்கள் ஒன்பது வருட காலம் சட்டமன்ற உறுப்பினராக இருந்து பல்வேறு அனுபவங்களை, கசப்பான அனுபவங்களைப் பெற்று, மாமன்ற உறுப்பினர்களுக்கு எத்தகைய சீர்குலைவும் ஏற்படாமல் தவிர்க்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தை, பழைய அனுபவத்தின் வாயிலாக அவர்கள் பாடமாகப் பெற்றிருக்கிறார்கள். இங்கே உரையாற்றிய மாமன்ற உறுப்பினர்கள் அத்தனைபேரும், பரிதி இளம்வழுதி அவர்கள் இங்கே சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது தான் ஏற்றுக்கொண்ட கசப்பான உணர்வுகளை எல்லாம் மற்றவர்கள் மீது திணிக்க மாட்டார்கள் என்று சொன்னார்கள். திணிக்கவே மாட்டார்கள். காரணம் அவர் பெற்ற அந்த அனுபவங்கள், அவர் பெற்ற கசப்பான அந்த உணர்வுகள், தனக்கு ஏற்பட்ட துன்பங்கள் மற்றவர்களுக்கும் ஏற்படக் கூடாது என்று எண்ணிச் செயல்படுகிற ஒரு இளம் தளபதியாக இருக்கிற பரிதி இளம்வழுதி அவர்கள் நிச்சயமாக இந்த மன்றத்தினுடைய மரபுகளை, பண்புகளைச் சிறப்பாக நடாத்திச் செல்வார்கள் என்பதில் ஆழமான நம்பிக்கை எனக்கு உண்டு. ஆகவே, புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர், பண்பாளர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்களுக்கும், அன்பிற்குரிய துணைத் தலைவர் திரு. பரிதி இளம்வழுதி அவர்களுக்கும், தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சி என்ற தேரை சிறப்பாக நடத்திச் செல்லத் தயாராகிக் கொண்டிருக்கின்ற இந்த வேளையில், நீங்கள் இந்த மாமன்றத்தைச் சிறப்பாக நடத்தி மீண்டும் இந்திய வரலாற்றில் தமிழகச் சட்டமன்றம் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றது என்ற நிலையை உருவாக்கித் தாருங்கள் என்று நான் சார்ந்திருக்கின்ற அகில இந்திய ஃபார்வார்டு பிளாக் கட்சியின் சார்பில் வாழ்த்தி விடைபெறுகின்றேன். நன்றி. வணக்கம்.



1996 மே 23]

முற்பகல் 10-45

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர். நீங்கள் சபாநாயகராக இருக்கிறீர்கள், உங்களையும் துணை சபாநாயகரையும் பாராட்டிப் பேசுவதற்குத்தான் எதிர்க்கட்சிகள் எல்லாம் இருக்கின்றன. இதற்கு முன்பு உள்ள பேரவைத் தலைவர்களைத் தாக்கிப் பேசுவதுதான் சபையின் மரபா, பண்பா? இதை நீங்கள் கண்டிக்க வேண்டும். இதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் ஒன்றை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கு, முன்னாள் சட்டப் பேரவைத் தலைவருடைய பெயரைக் குறிப்பிட்டு யாரும் பேசவில்லை. அப்படிப் பேசுவதற்கு நான் அனுமதி அளிக்கமாட்டேன். அதே நேரத்தில் இந்த அவையின் மரபுகளைக் காப்பாற்ற வேண்டும், போற்ற வேண்டும் என்று இந்த அவையிலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லுவதற்கு முழு உரிமையுண்டு. ஆகவே, நீங்கள் எழுப்பிய பாயின்ட் ஆப் ஆர்டரிலே பொருள் இல்லையென்ற என்னுடைய தீர்ப்பை அளிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த திரு. டி. மணி அவர்கள்.

**திரு. டி. மணி:** புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற இந்தச் சபையின் மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, துணைச் சபாநாயகர் அவர்களே, மார்க்சீய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே தங்களை வாழ்த்துகின்றேன். குறிப்பாக, இந்தச் சட்டப் பேரவை மூலம் நம்முடைய ஜனநாயக மரபுகளைப் பாதுகாக்க வேண்டும் என்று சொன்னால் ஒரு வலுவான எதிர்க்கட்சி வேண்டும். ஆனால் இங்கே எதிர்க்கட்சி என்பது எண்ணிக்கையிலே குறைவாக இருக்கின்ற காரணத்தினால் அந்த ஜனநாயக மரபுகளை எந்த அளவிற்குப் பாதுகாக்க வேண்டுமோ அப்படி தமிழ் நாட்டின் மக்களுடைய பிரச்சினைகளை இங்கே எடுத்து வைப்பதற்கான வாய்ப்பினை, அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நேரங்களை, எதிர்க் கட்சியிலே எண்ணிக்கையில் குறைவாக இருக்கின்ற எங்களுக்கும் உரிய பங்கினை தந்து, நம்முடைய ஜனநாயக மரபுகளை பாதுகாப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு மீண்டும் உங்களை ஒரு முறை வாழ்த்தி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

53|12அ-5

[1996 மே 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், பாரதீய ஜனதா கட்சியைச் சேர்ந்த திரு. சி. வேலாயுதன் அவர்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சபையை நடத்திச் செல்லுவது என்பது மிக்க பொறுப்போடு, சிறந்த கவனத்தோடு செய்ய வேண்டிய மிகப்பெரிய காரியமாகும். எனக்கு முன்னால் பெரியவர் ஒருவர் பேசியபோது,

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற வள்ளுவருடைய குறள்படி எந்தவிதமான போட்டியும் இல்லாமல் அனைவரும் ஒரே மனதோடு தேர்ந்தெடுத்திருக்கிறோம் என்று சொன்னார். பலவிதமான சிந்தனைகளோடு, பலவிதமான பிரச்சினைகளை முன்வைத்து, பலவிதமான அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொருவரும் அவரவர்களுடைய நிலையில், அவரவர்கள் சொல்லுவதே சரியென்று நினைத்துப் பேசுவார்கள், அவர்களுக்கெல்லாம் தக்கபடியான வாய்ப்பினை வழங்கி, அவர்களுடைய மனம் புண்படாத அளவிற்கு அவர்களுக்கு நீதி வழங்குவீர்கள் என்ற ஏக சிந்தனையோடு, ஏக மனநிறைவோடு, எந்தவிதமான போட்டியும் இல்லாமல் அனைவரும் ஒரே மனதோடு தேர்ந்தெடுத்திருக்கிறோம். இப்படிப்பட்ட நம்முடைய சபையை வழிநடத்திச் செல்லுவது என்று சொன்னால், தமிழகத்திற்கு ஒரு பொற்காலம் வாய்ந்த சபை இந்த நல்லவேளையில் வாய்க்கும் என்று நம்புகிறேன்.

"எல்லோரும் இன்புற்றிருப்பதேயன்றி
வேறொன்றும் அறியேன் பராபரமே"

என்று தாயுமானவ சுவாமிகள் பாரத நாட்டினுடைய பண்பாட்டை, கலாச்சாரத்தை உலக மக்கள் அனைவரும் பெற்று இன்புற்றிருக்க வேண்டும் என்று சொல்லியதைப் போன்று நம்முடைய சட்டமன்றத்தினுடைய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருடைய மனமும் நோகாதவாறு, அனைவரும் இன்புற்று சுபிட்சத்தோடு இருக்க தினசரி காலை முதல் மாலை வரை அவையில் வந்திருந்து அவர்களுக்கு நல்ல ஆறுதல் வழங்கி, நல்லபடியான தீர்ப்புகள் வழங்கக்கூடிய ஒரு பெரிய பொறுப்பில் இருக்கின்ற உங்களுக்கு எல்லாவிதமான சௌபாக்கியங்களும், சுபிட்சமான மனநிலையும், அனைவரையும் அரவணைத்துக் கொண்டு செல்லக்கூடிய பாங்கையும் எல்லாம் வல்ல இறைவன் அருள வேண்டும் என்று இந்த நல்ல வேளையில் கேட்டு அமைகிறேன். பாரத் மாதா கீ ஜெய்.



1996 மே 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

முற்பகல் 10-50

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணைத் தலைவர் அவர்களே, என்னை இந்த மாமன்றத்திற்குத் தேர்ந்தெடுத்து அனுப்பிய இலட்சோபலட்சம் தேவேந்திர குல மக்கள், ஆதிதிராவிட மக்கள், அருந்ததியின மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும், ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தங்களை வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன். "Tell me your friend, I will tell who you are" என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. அதுபோல தமிழகத்தில், இடைப்பட்ட இரண்டு ஆண்டுக் காலத்தைத் தவிர, இருண்ட 20 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு மீண்டும் சமூக நீதி மலரவும், ஜனநாயகம் மலரவும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் நல்லாட்சி மலர்ந்திருக்கிறது. அதற்குப் பக்கபலமாக தாங்கள் இந்த சபையை நடத்துவதற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். 'வெளியிலே தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளே அனுப்பப்பட்டிருக்கின்றாய்; உன்னை வெளியே அனுப்பி விடுவேன்' என்ற ஒரு மரபு கடந்த இருபது வருஷமாக இருந்தது. அதுபோன்று இல்லாமலும், 'உள்ளே என்ன பேசிவிட முடியும்' என்ற அளவில் ஜனநாயகத்தினுடைய குரல்வளை நெரிக்கப்பட்டிருந்தது போன்ற ஒரு மரபு இல்லாமலும், இந்தத் தமிழ் மண் பல்வேறு விதங்களிலே பாரத மண்ணிலே முன் உதாரணமாக இருந்திருப்பதால் அந்தப் பாரம்பரியம் காத்து, இந்தச் சபையை நடத்திச் செல்லத் தாங்கள் உதவுவீர்கள் என்ற அடிப்படையில் எப்போதும், எல்லாத் தரப்பினருக்கும் தலைவர் அவர்களும், துணைத் தலைவர் அவர்களும் வாய்ப்பு அளிக்கக் கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஜனதா தளக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. வெங்கடசாமி அவர்கள்.

**Thiru B. Venkatasamy :** On behalf of Janata Dal, I whole heartedly congratulate Thiru. Palanivel Rajan, the Speaker of the 11th Tamil Nadu Assembly, because he belongs to the great patriotic family of P.T. Rajan who was the father of social justice in Tamil Nadu. Actually, Tamil Nadu Assembly is one of the models in India equal to the British Parliamentary system, that was adopted by previous Speakers like Thiru Sivashanmugam Pillai, Dr. U. Krishna Rao, Munu Adhi, S.P. Aditanar, etc. At the same time there was one Secretary,

[Thiru B. Venkatasamy] [1996 மே 23

R.V. Krishna Iyer, who was an authority on Parliamentary affairs in India and a leading Secretary. I think the present Secretary is also an efficient man and he will lead and guide our Assembly very, very properly. Presently, all our friends are speaking about the previous Speaker and Government. We are sitting in this A.C. room and people are observing from outside what we are doing. So, the result of the outgoing Government and the Speaker was the result of the observations from outside. That we must understand. So, I think Thiru. Palanivel Rajan who is a real democrat and who is from a very great patriotic family will guide us and I hope the present Speaker will sail in the smooth way and keep up all the traditions of the Assembly with equilibrium and modesty so that the reputation of this Assembly will be kept up. I want to stress one more thing. People outside are actually seeing what we are doing and at the same time, as our friends told already, we must give more time for discussion. The ruling party people are there and they also can express their grievances in the Assembly— their Constituency grievances. So they should be given more time. Definitely people in the Constituency also will be happy. The concerned Ministers can attend to those grievances. So I request the Hon'ble Chief Minister to give some days 90 days, 70 days, like that. But presently I came to know that it has been reduced to the extent possible. Because if the opposition Members put question, it is your duty to answer and at the same time grievances of the people also will be redressed. So, I request this Assembly to give more opportunity to all the people so that we can redress the grievances of the people and at the same time we can do justice to the people. Actually our Deputy Speaker Thiru Ilamvazhuthy is also a very enthusiastic young man. I came to understand that he experienced a lot of difficulties in the last Assembly and it should not occur I think it will not occur because the traditional people have come to power and things will go on smoothly. I wish him also for his better future and I request you all to keep up the tradition of our Tamil Nadu Assembly based on to the British Parliamentary system and I thank you for giving me this opportunity. Thank you very much.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.



1996 மே 23]

முற்பகல் 10-55

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புமிகுந்த இந்த அவை தங்களைப் பேரவையின் தலைவராகவும், மாண்புமிகு திரு. இளம்வழுதி அவர்களைப் பேரவையின் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுத்துள்ள இந்த இனிய நேரத்தில் தங்கள் இருவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் கூறுகின்ற வகையில் சில கருத்துக்களை எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அவையின் உறுப்பினர்கள் பதவி உறுதிமொழி எடுத்துக் கொள்ள தற்காலிக அவைத் தலைவராகப் பொறுப்பேற்றிருந்து, இன்று தங்களுடைய பெயரை இந்த அவையில் "தேர்ந்தெடுக்கப்பட்டவர்" என்று அறிவித்து திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்கள் குறளிலேயிருந்து எடுத்துக்காட்டிய அந்த வரிகளை இங்கு பாராட்டிப் பேசிய அனைவருமே திரும்பச் சொல்லிக் காட்டியிருக்கிறார்கள்.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற குறளை மாண்புமிகு திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்கள் தன்னுடைய தற்காலிகப் பொறுப்பை விட்டு அகலுகிற நேரத்திலே எடுத்துரைத்தார்கள். சிலர் இங்கே பாராட்டி உரையாற்றியபோது தாங்கள் அமைச்சராக வந்திருக்க வேண்டும் என்றும், திரு. இளம்வழுதி அமைச்சராக வந்திருக்க வேண்டும் என்றும் சொன்னது ஆளும் கட்சிக்கும், உங்களுக்குமிடையே கலகமூட்ட அல்ல என்பதை நான் மிக நன்றாக அறிவேன். உங்கள் இருவர் மீதும் அவர்கள் கொண்டுள்ள அன்பையும், பற்றையும், பாசத்தையும்தான் அது காட்டுகிறது. ஒருவேளை நீங்களும், திரு. இளம்வழுதியும் அமைச்சர்களாக இங்கே அமர்ந்திருப்பீர்களேயானால், அவரவர்களுடைய தொகுதிகளுக்காக எப்படியெல்லாம் உங்களிடத்திலே சண்டை போட்டிருப்பார்களோ, அது எனக்குத் தெரியாது. அதிலிருந்து உங்களை மீட்பதற்காகத்தான் உங்களை அவைத் தலைவராகவும், திரு. இளம்வழுதியை துணைத் தலைவராகவும் இந்த மாமன்றம் ஏகமனதாகத் தேர்ந்தெடுத்திருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

முற்பகல் 11-00

இந்த அவை பழம்பெருமை வாய்ந்த மிகத் தொன்மையான ஒரு அவை என்பதை நான் பல நேரங்களில் சுட்டிக்காட்டி இருக்கிறேன். இதற்கு முதலில் பிரிட்டிஷார் காலத்தில் கவுன்சில் என்றுதான்

பெயர். பிறகுதான் இது சட்டமன்றமாக ஆகியிருக்கிறது. அசெம்பிளியாக ஆங்கிலத்திலே சொல்லாக்கம் பெற்றிருக்கிறது. 1919-ம் ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவிலே இரட்டை ஆட்சி முறையை நடைமுறைப்படுத்தியபோது, இந்தியாவிலே உள்ள எல்லா மாநிலங்களையும் விட்டுவிட்டு, அந்த இரட்டை ஆட்சி முறைக்கு இரண்டே இரண்டு மாநிலங்களைத்தான் ஜனநாயகப் பரிசோதனைக்காகத் தேர்ந்தெடுத்தது. அந்த இரண்டு மாநிலங்களில் ஒன்று பஞ்சாப் மாநிலம், மற்றொன்று நம்முடைய மாநிலம். நம்முடைய மாநிலம் என்று சொன்னால் இன்றைக்கு இருக்கின்ற தமிழ்நாடு அல்ல, அன்றைக்கு இருந்த சென்னை மாகாணம். அந்த இரண்டில் நடைபெற்ற ஜனநாயகப் பரிசோதனையில் இந்த மாகாணத்தில் ஜஸ்டிஸ் கட்சி, பஞ்சாப் மாநிலத்தில் 'யூனியனிஸ்ட்' கட்சி ஆகிய இரண்டு கட்சிகளும் அந்த ஜனநாயக பரிசோதனையிலே களத்திலே இறங்கின. இந்த மாநிலத்தில் திராவிட இயக்கத்தினுடைய முன்னோடியாக விளங்கிய நீதிக்கட்சி பெரும்பான்மையான இடங்கள் பெற்று வென்று காட்டியது. அந்த நீதிக்கட்சி என்ற ஒரு பெரிய சமுதாயப் பேரியக்கத்தின் தூண்களிலே ஒருவர்தான் தங்களுடைய அருமைத் தந்தையார் தமிழவேள், பண்பாளர் திரு. பி.டி. ராஜன் அவர்கள் ஆவார்கள். அவர் 1929-ஆம் ஆண்டு அமைச்சராகவும் பொறுப்பேற்று தன்னுடைய பணிகளை, ஏற்றுக் கொண்ட நிர்வாகத்தை, ஒடுக்கப்பட்ட, அழுத்தப்பட்ட மக்களுக்கு நலன்களைச் சேர்ப்பதற்காக எவ்வளவு செம்மையாக நிறைவேற்றினார்கள் என்பதை வரலாறு இன்றைக்கும் உணர்த்திக் கொண்டிருக்கிறது.

1929-ஆம் ஆண்டு செங்கற்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் தந்தை பெரியார் அவர்கள், டபிள்யு. பி.ஏ. சௌந்திரபாண்டியன் அவர்கள், தங்கள் தந்தையார் திரு.பி.டி.ராஜன் அவர்கள் கலந்துகொண்டு நிறைவேற்றிய புரட்சிகரமான பல தீர்மானங்களில் ஒன்றுதான் பெண்களுக்கும் இந்தச் சமுதாயத்தில் ஆண்களைப்போல் சொத்தில் சம உரிமை வழங்கவேண்டும் என்பதாகும். 1929-ஆம் ஆண்டு செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டில் தங்கள் தந்தையார் முன்னிலையில் தந்தை பெரியார் அவர்கள் நிறைவேற்றிய தீர்மானம்தான் 1989-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசில் பெண்களுக்கு சொத்தில் சம உரிமை உண்டு என்ற சட்டத்தை உருவாக்கக் காரணமாக இருந்தது என்று நான் அன்றைக்கு நினைவுபடுத்திப் பேசியிருந்தேன்.



ஒரு புகழ் வாய்ந்த இயக்கத்தினுடைய பாரம்பரியம் மிக்க குடும்பம் தங்களுடைய குடும்பம். பாரம்பரியம் மிக்க குடும்பம் என்று இங்கே பலரும் தங்களுடைய குடும்பத்தைப் பாராட்டியபோது, செல்வச் செழிப்பு மிக்க குடும்பம் என்பதாலோ, அல்லது பணக்காரக் குடும்பம் என்பதாலோ, அல்லது அந்த வட்டாரத்திலே செல்வாக்கு மிகுந்த குடும்பம் என்பதாலோ அந்தப் பாரம்பரியம் என்ற வார்த்தையை அவர்கள் பயன்படுத்தினார்கள் என்று நான் எண்ணவில்லை. தங்களுடைய பாரம்பரியம், தங்களுடைய தந்தையாருடைய பாரம்பரியம், திராவிட இயக்கத்தின் முன்னோடி இயக்கமான நீதிக் கட்சியினுடைய பாரம்பரியம் ஆகும். அந்தப் பாரம்பரியத்திலே வந்த தாங்கள் இந்த மாமன்றத்திலே எங்களுக்கு எல்லாம் நடுவராக இருந்து நல்ல தீர்ப்பு வழங்குகின்ற இருக்கையிலே அமர்ந்து இருக்கிறீர்கள்.

முற்பகல் 11-05

75 ஆண்டுகளுக்கு முன்பு, 1921 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 12ஆம் நாள் கென்ட் கோமகன்-- "டியூக் ஆப் கென்ட்"-- நமது மாநிலத்தில் அரசியல் சட்டத்தைத் தொடங்கி வைத்தார். நமது மாகாண கவுன்சில் ஜனநாயகவாதிகளுடைய பாராட்டைப் பெற்று விளங்குகிறது என்பதற்காக 1922ஆம் ஆண்டு மார்ச் 6ஆம் தேதி, இங்கே உரையாற்றிய நம்முடைய அ.தி.மு.க. தலைவர் மாண்புமிகு திருநாவுக்கரசு குறிப்பிட்டதைப் போல, "லார்ட் வெலிங்டன்" அவர்களும், அவர்களுடைய துணைவியாரும் இணைந்து நின்று ஒரு பரிசை இந்த அவைக்கு வழங்கினார்கள். அதுதான் தாங்கள் அமர்ந்துள்ள இந்த அழகான நாற்காலியாகும். அந்தப் பரிசளிப்பு விழாவிலே "லார்ட் வெலிங்டன்" ஆற்றிய உரை என்றென்றும் இந்த அவையிலே உள்ளவர்கள் நெஞ்சில் பதிய வைத்துக்கொள்ள வேண்டிய உரையாகும். அந்த வாசகம் Lord Wellington said–

"I realise the enormous advance that has been made in the conduct of the proceedings of the Legislative Council. I find that all your proceedings are carried out with all the customs and habits of parliamentary procedure in the House of Commons. It is my most sincere hope that all those who succeed you and sit in the Chair may uphold to the highest degree, the dignity and prestige of the Madras Legislative Council and I trust that they will always conduct the affairs with their decisions, good judgement and tact which so eminently characterised our conduct of affairs."

218919

அதாவது 'பேரவையின் நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை நான் உணர்கிறேன். பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தினுடைய சம்பிரதாயத்தினுடைய நடைமுறைகளையும் நீங்கள் கடைப்பிடிக்கிறீர்கள் என்றும், உங்களுக்குப் பிறகு உங்களைத் தொடர்ந்து இந்த இருக்கையில் அமரப் போகிறவர்கள் இந்த சென்னை சட்டமன்றப் பேரவையின் மிக உன்னத கௌரவத்தையும் கண்ணியத்தையும் கட்டிக்காப்பார்கள் என்றும் இதுவரை இந்தச் சபையின் நடவடிக்கைகள் எப்படித் திறமையாக நடத்தப்பட்டதோ அது போலவே இனியும் இச்சபையை புத்திக்கூர்மையான தீர்ப்புகள், தீர்க்கமான முடிவுகள் மூலம் அவையை நடத்திச் செல்வார்கள் என்றும் நம்புகிறேன்'. இவ்வாறு 74 ஆண்டுகளுக்கு முன்பே லார்ட் வெலிங்டன் கருத்து கூறியிருக்கிறார். ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை நாம் விரட்டி விட்டோம் என்றாலும் அந்த மரபுகள், அவர்கள் கடைப்பிடித்த ஜனநாயக இலக்கணம் இவற்றை நாம் என்றைக்கும் போற்றத் தவறவில்லை என்ற காரணத்தினாலேதான் இந்த வாசகத்தை நான் இங்கே சுட்டிக்காட்டினேன். 1929 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் நீதிக்கட்சி வெற்றி பெற்று திவான் பகதூர் முனுசாமி நாயுடு அவர்களின் தலைமையிலே அமைச்சரவை அமைந்தபோது தங்களுடைய தந்தையார் பி.டி. ராஜன் அவர்கள் அதிலே அங்கம் வகித்தார். அதற்கு முன்பே முதன்முதலில் மதுரை மாவட்டத்தில் பிராமணர் அல்லாத தொகுதியிலே நடைபெற்ற தேர்தலில் தங்களுடைய தந்தையார் பி.டி. ராஜன் அவர்கள் 5000க்கு மேற்பட்ட வாக்குகள் - அதாவது அன்றைக்கு மொத்த வாக்குகளே மாகாணம் முழுவதும் 10 லட்சத்திற்குள் தான் என்ற நிலையிலே தான் இருந்தது. அதிலே மதுரை மாவட்டத்திலே நடைபெற்ற அந்தத் தொகுதியில் எல்லோரையும் விட அதிகமாக 5000-க்கு மேற்பட்ட--வாக்குகளை வாங்கி தங்களுடைய தந்தையார் அன்றைக்கு வெற்றி பெற்றிருக்கிறார்கள். நான் சென்னை மாநகரத்தில் இந்தத் தேர்தலில் போட்டியிட்ட சேப்பாக்கம் தொகுதியில் மக்களிடத்திலே வாக்குகளைக் கேட்டு வந்தபோது ஒரு வீட்டைக் காட்டினார்கள். அது நான் ஏற்கெனவே பார்த்து அறிந்து உணர்ந்த வீடுதான் என்றாலும்கூட அந்த வீட்டைக் காட்டினார்கள். ஒரு மண்டபம் போல அமைப்புடையது அந்த வீடு. அந்த வீட்டிற்குள் இருந்து ஒரு பெரியவர் வெளியே வந்தார். அவரது வயது 80க்கு மேல் இருக்கும். அவர்தான் இந்த இயக்கத்தை உருவாக்கிய நடேசனார் அவர்களுடைய தம்பி மகன் மணி என்பவர். அந்த 80 வயது



பெரியவர் எனக்கு மாலை அணிவித்து இங்கேதான் 1912ம் ஆண்டு திராவிட சங்கம் உதயமானது என்று குறிப்பிட்டார்.

முற்பகல் 11-10

இப்படி 1912 ஆம் ஆண்டு உதயமான திராவிட சங்கம் இன்றைக்கு பல வளர்ச்சிகளைப் பெற்று, பல மாறுதல்களைப் பெற்று, பல எதிர்ப்புகளுக்கு இடையிலேயும், பல சோதனைகளுக்கு இடையிலேயும் வீழாமல், தாழாமல் ஓங்கி உயர்ந்திருக்கிறது என்றால் அது அந்த இயக்கத்திற்கு தொடக்கத்திலே ஊட்டப்பட்ட உரம். அந்த உரம் ஊட்டிய முக்கியமானவர்களில் உங்களுடைய தந்தையாரும் ஒருவர். அவர்களுடைய அருமைப் புதல்வராகிய தாங்கள், இங்கே எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள், தோழமைக் கட்சியிலே உள்ளவர்கள் எல்லாம் எடுத்துக்காட்டியதைப் போல பண்பாளர் என்கின்ற அருமையான பட்டத்தைப் பெற்றவர்கள். அவர்கள் உங்களிடத்திலே கேட்டுக் கொண்டார்கள். அதிலும் குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். ஆளுங்கட்சிக்குக் கால் பகுதி கொடுங்கள், எங்களுக்கு முக்கால் பகுதி ஒதுக்குங்கள் என்று சொன்னார்கள். அதுவும் ஒருவகையிலே சரிதான். எங்களுக்கு கால் கொடுங்கள். நாங்கள் எழுந்து நின்று பேசுவதற்குக் கால் கொடுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் மாண்புமிகு தீரன் அவர்கள் சொன்னார்கள். காதை அவர்களுக்கும், வாயை எங்களுக்கும் கொடுங்கள் என்று அவர்கள் சொன்னார்கள். இங்கே வந்திருக்கின்ற உறுப்பினர்கள் ஆளுங்கட்சி உறுப்பினர்களானாலும், தோழமைக் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களானாலும் அவரவர்கள் ஒரு தொகுதியிலே இருந்துதான் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கின்றார்கள். பொதுப் பிரச்சினையைப் பேசுகின்ற நேரத்திலே வேண்டுமானால் தோழமைக் கட்சிக்கு, எதிர்க்கட்சிக்கு அதிக நேரத்தை ஒதுக்குவதும், தொகுதிப் பிரச்சினையைப் பேசுவதற்கு எல்லாத் தொகுதியிலேயும் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கின்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பும் அளிக்க வேண்டியது மிக மிக அவசியமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இல்லாவிட்டால் அவர்கள் தொகுதிப் பக்கமே போகமுடியாது. நிகழ்காலத் தேர்தலிலே நடைபெற்ற பல சம்பவங்களை நாம் பார்த்திருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, நீங்கள் எதிர்க்கட்சித் தலைவருடைய பேச்சை அப்படியே ஏற்றுக்கொண்டு அடுத்த தேர்தலில் ஆளுங்கட்சி

53/124-6

உறுப்பினர்கள் எல்லாம் தொகுதிப் பக்கம் போக முடியாத ஒரு இக்கட்டை ஏற்படுத்திவிட வேண்டாம் என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற திரு. இளம்வழுதி, இன்றைக்கு மாண்புமிகு துணைத் தலைவராக ஆகியிருக்கிறார். அவரும் அமைச்சராக ஆகியிருக்கலாமே, ஒருவராக நின்று இங்கே போராடினாரே என்றெல்லாம் இங்கே பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். நான், அவர் ஒருவராக நின்று இங்கே போராடிய பொழுதெல்லாம் ஏடுகளில் எழுதியிருக்கிறேன். மேடைகளில் பேசி இருக்கிறேன். 'என் தம்பி இளம்வழுதி இந்திரஜித்தினைப் போல நின்று போராடுகிறான்; அபிமன்யுவைப் போல நின்று போராடுகிறான்' என்று எழுதியிருக்கிறேன். அதைவிடவா இளம்வழுதிக்கு அமைச்சர் பதவி பெரிது என்று எனக்குத் தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) பெரிது என்று இளம்வழுதி கருதுவாரேயானால், அதை இங்கே வெளிப்படையாகச் சொல்வாரேயானால் இப்பொழுதே கூட மாற்றித் தர நான் தயாராக இருக்கிறேன் என்று கூறி, பெருமைக்கும், பேரன்புக்கும், பண்புக்கும் பாத்திரமான பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களை வழங்குகிறேன். சிலர் தங்களை வாழ்த்த வயதில்லை என்று சொன்னார்கள். எனக்கு வயது இருக்கிறது. உங்களைவிட மூத்தவன் என்ற முறையிலே உங்களை நான் வாழ்த்துகிறேன். அதைப்போலவே துணைத் தலைவர் இளம்வழுதியையும் வாழ்த்துகிறேன். இந்த அவை எல்லா மாண்புகளோடும் சிறந்து விளங்க நல்ல முறையிலே வழிநடத்துங்கள் என்று உங்களைக் கேட்டுக் கொண்டு, மீண்டும் பாராட்டி, வாழ்த்தி அமைகிறேன், வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி).*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களின் நன்றியுரை.

***மாண்புமிகு திரு. இ. இளம்வழுதி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாராளுமன்றத்தின் தாய் என்று போற்றப்படுகின்ற பிரிட்டிஷ் பாராளுமன்றத்தைப் பின்பற்றி நடைபெறுகின்ற நம்முடைய தமிழகச் சட்டமன்றம் வரலாற்றுப் பெருமையும், தொன்மையும் மிக்கதாகும். அத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டப் பேரவைக்குத் தலைவராக திராவிட இயக்கத்தின் முன்னோடியான நீதிக் கட்சியினுடைய பாராம்பரிய வழித்தோன்றலாகவும், பண்பாளராகவும் உயரிய கல்வியாளராகவும்



விளங்குகிற தங்களைப் பேரவைத் தலைவராக தேர்ந்தெடுத்து, இந்த சபையை வழிநடத்துவதற்கு தங்களுக்குத் துணையாக நான் துணைத் தலைவராக பணியாற்றுகின்ற வாய்ப்பினையும் வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய தாயுள்ளத்திற்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 11–15*

இந்த உயர்ந்த ஸ்தானத்திலே உட்காருகின்ற நேரத்திலே, சாதாரண சாமானிய எளிய குடும்பத்தில் இருந்து வந்த எனக்கு உங்களுக்குத் துணையாகப் பணியாற்றுகின்ற வாய்ப்பு கிடைத்து இருக்கிறது. அந்த வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட ஓர் உயரிய பொறுப்புக்கு வருகின்ற நேரத்திலே மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆனால், அதே நேரத்திலே, மகிழ்ச்சியான இந்த நேரத்திலே எனக்குள்ளே ஒரு சிறு வேதனையும் இருக்கிறது. வேறு ஒன்றுமில்லை; என்னை வளர்த்து ஆளாக்கிய என்னுடைய தந்தையார் இந்தக் காட்சியைக் கண்டு களிப்பதற்கு இல்லை என்ற ஒரு வருத்தம்தான். அவர் இல்லை என்றாலும், தாய்க்குத் தாயாகவும், தந்தைக்குத் தந்தையாகவும் என்னை அரவணைத்து ஆதரிக்கின்ற மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இருக்கிறார்கள் என்ற அந்த மன நிறைவோடு, எங்களை ஒருமனதாகத் தேர்ந்தெடுத்த இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் அனைவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மகிழ்ச்சியான சூழலிலே, தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிற எங்களை வாழ்த்தி, பாராட்டி கட்சியின் தலைவர்கள் பலரும் பேசினீர்கள். கட்சியின் தலைவராகப் பேசியவர்களில் பல பேர் கடந்த சட்டமன்றத்திலும் என்னோடு பணியாற்றியவர்கள்; இப்போதும் வந்து இருக்கிறீர்கள் என்பதிலே எனக்கு மகிழ்ச்சி. நல்லவை நடக்கின்ற நேரத்திலே அல்லவை நினைக்கக்கூடாது என்று சொல்லுவார்கள். அதேபோல மகிழ்ச்சியான இந்த நேரத்திலே மற்றதை நினைக்கக்கூடாது என்று நான் என்னதான் நினைத்தாலும், கடந்த காலத்தின் அனுபவங்கள் மலரும் நினைவுகளாக என்னுடைய நெஞ்சிலே மோதுகிறது. நான் இதைத் தவறாகச் சொல்லவில்லை. இங்கே, உங்களுடைய அச்சத்தையும் கவலையையும் தெரிவித்தீர்கள். அதேபோல இப்போது இருக்காது. இந்த ஓங்கித் தட்டுதல், மண்டியிடுதல், வெளியேற்றுதல்––இவையெல்லாம்

அதிகமாக இருக்காது. அந்தக் கசப்பான அனுபவங்களை நேரிடையாக உணர்ந்தவன் என்கின்ற காரணத்தாலே, அவையெல்லாம் இருக்காது என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், கல்லாய்க் கிடந்த அகலிகை, இராமன் பாதம் பட்டு சாப விமோசனம் பெற்றது போல, கடந்த காலத்திலே எப்படி இருக்கக்கூடாதோ, அப்படி இருந்த இந்தச் சட்டமன்றம், நம்முடைய முதல்வர் அவர்களுடைய பாதம் பட்டு இன்றைக்குப் புனிதம் பெற்று இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த அடிப்படையிலே நம்முடைய பேராசிரியர் தீரன் அவர்கள் என்னை, என்னுடைய கடந்த கால அனுபவங்களைக் குறிப்பிட்டு, யாம் பெற்ற துன்பம் பெறுக இவ்வையகம் என்பது போல எங்களுக்கு வழங்கிவிடாதீர்கள் என்று சொன்னார்கள். அவர்களுக்கும் சொல்லிக்கொள்கிறேன்; இந்த அவையின் உறுப்பினர்களுக்கும் சொல்லிக்கொள்கிறேன், நாங்கள் வளர்ந்த இடம், எங்களை வளர்த்த தலைவர்கள் அப்படிப்பட்டவர்கள் அல்ல. எங்களுக்கு ஏற்பட்ட இன்னல் எங்கள் எதிரிகளுக்குக் கூட வரக்கூடாது என்று நினைப்பவர்கள். எனவே, விருப்பு வெறுப்பு இன்றி நடந்து கொள்வோம் என்பதைத் தெரிவித்து, எங்களைத் தேர்ந்தெடுத்த அனைவருக்கும், ஒருமனதாகத் தேர்ந்தெடுத்த அனைவருக்கும் மீண்டும் நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதினொன்றாவது சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களே, இந்த அவையின் தலைவராக ஒருமனதாக என்னைத் தேர்ந்தெடுத்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தாய் உள்ளத்தோடு என்னை அரசியலில் ஆளாக்கி, பல நேரங்களில் அடங்காத பிள்ளையாக இருந்தாலும் அதையும் பொருட்படுத்தாமல் இந்தப் பொறுப்புக்கு நீ தகுதியானவன் என்று எனக்கு ஒரு சிறப்பைக் கொடுத்து, இந்தப் பதவிக்கு என்னை முன்மொழிந்து, எனக்குப் பெருமை சேர்த்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-20*

வழிமொழிந்த அவையின் முன்னவர், எங்கள் அரசியல் ஆசான், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாராட்டிப் பேசிய பெருமக்கள் எல்லாம் இடைக்காலத்திலே காணாமல் போன மரபுகளை மீண்டும் தேடிப்பிடிக்க



வேண்டுமென்ற மையக் கருத்தைச் சொன்னார்கள். அதிலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியைச் சார்ந்த திரு. தாமரைக்கனி அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கூட எழுப்பினார்கள். கடந்த காலத்தைப் பற்றி பேசலாமா என்று கேட்டார்கள். கடந்த காலத்திலே மரபு எல்லாம் ஒழுங்காகத் தான் இருந்தது என்று கூட அவர்கள் சொல்ல முயற்சித்தார்கள் என்று நான் கருதுகிறேன். மக்கள் ஆட்சி முறையிலே அவருக்கு அந்தக் கருத்தைச் சொல்வதற்கு உரிமை உண்டு. ஆனால், ஒன்றை மட்டும் நான் அவருக்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன். அவர்களின் குழுத் தலைவரான, முன்னாள் அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் நான் சட்டமன்றத் தலைவராக யார் யாரைப் பின்பற்ற வேண்டும், யார் யாரைப் பின்பற்றக்கூடாது என்று பெயர் சொல்லாமல் சொன்னார்கள். அவர்களுக்கு ஒரு நெருக்கடியை நான் உருவாக்க மாட்டேன். என்னுடைய அறைக்கு அவரை அழைத்து, யார் யாரை நான் பின்பற்றக்கூடாது என்ற பட்டியலை அவரிடம் இருந்து வாங்கிக்கொள்வேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆளும் கட்சியின் சார்பில் நான்தான் இந்தச் சட்டமன்றத் தலைவர் பதவிக்கு வேட்பாளர் என்று அறிவித்த பிறகு, ஆயிரக்கணக்கான கடிதங்கள் எனக்குக் கிடைக்கப்பெற்றன. மரபுகள் காப்பாற்றப்பட வேண்டுமென்ற மையக் கருத்தைச் சொல்லி எழுதியவர்கள் எல்லாம், கடந்த கால பேரவைத் தலைவர்களை நினைவுபடுத்தி, இவர்களை எல்லாம் நீங்கள் பின்பற்ற வேண்டும், மற்றவர்களைப் பற்றி ஒரு கெட்ட கனவாக நினைத்து நீங்கள் மறந்துவிட வேண்டுமென்று எல்லாம் எழுதியிருந்தார்கள்.

ஆகவே, மரபுகள் இந்தப் பேரவையில் பழங்காலத்தைப் போல புகழோடு இருக்க வேண்டும் என்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. கடந்த 10 நாட்களாக சட்டமன்ற அலுவலகத்திலே பணியாற்றுகின்ற அதிகாரிகள்கூட காணாமல்போன மரபுகளைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். நான் இரண்டுமுறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தேன் என்பதைக்கூட மறந்துவிட்டு ஏற்புரையிலே நான் ஏதாவது மரபை மீறிப் பேசிவிடுவேன் என்ற அச்சத்தின் காரணமாக எனக்குக்கூட ஒரு ஏற்புரை எழுதிக் கொடுத்தார்கள். நான் அவரிடம் சொன்னேன், இந்தப் பதவிக்கு ஆங்கிலத்திலே பெயர் Speaker. ஆனால், 235 உறுப்பினர்களைக் கொண்ட இந்தப் பேரவையில்--நியமன உறுப்பினரையும் கூட சேர்த்துச்

சொல்லுகின்றேன்--பேச உரிமை பெறாத ஒரே உறுப்பினர் நான்தான்,. இன்று பேசுகின்றேனே, இதுதான் என்னுடைய கன்னிப்பேச்சு, இதுதான் என்னுடைய கடைசி பேச்சு, இந்தப் பேச்சிலாவது நீங்கள் எனக்கு சுதந்திரம் கொடுக்க வேண்டுமென்று அவரிடம் சொல்லி, அவர்களுக்கு ஒரு உறுதியை அளித்தேன். முதலமைச்சருக்கு இருக்கின்ற நம்பிக்கைகூட உங்களுக்கு என்மீது இல்லை, நான் மரபு மீறிச் செயல்பட மாட்டேன் என்று அவர்களுக்கு உறுதி அளித்தேன்.

முற்பகல் *11-25*

யார் யாரை நான் பின்பற்ற வேண்டுமென்று பலரும் எடுத்துச் சொன்னார்கள். நான் அவர்களுக்கு எல்லாம் எடுத்துச் சொல்வேன். 'Mother of Parliaments' என்று பிரிட்டிஷ் பாராளுமன்றம் அழைக்கப்படுவதை நாம் அனைவரும் அறிவோம். ஏறத்தாழ 350 ஆண்டுகளுக்கு முன்னாலே அந்த நாடாளுமன்றத்திற்கு ஒரு தலைவர் இருந்தார். முதலாம் சார்லஸ், மன்னனாகக் கொடிகட்டிப் பறந்த காலத்தில், மன்னனின் அராஜகத்தைப் பொறுக்கமுடியாமல், அந்த மாமன்றத்திலே ஐந்து மாண்புமிகு உறுப்பினர்கள், முடியாட்சியை முடித்து வைக்கவேண்டும், குடியாட்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தார்கள். கேள்விப்பட்ட மன்னன், அனுமதி பெறாமல் அந்த மன்றத்திற்குள்ளே நுழைந்து, அந்த மன்றத் தலைவரைப் பார்த்து, முடியாட்சியை முடிக்கவேண்டுமென்று சொன்ன உறுப்பினர்கள் தேசத் துரோகச் செயல்களில் ஈடுபட்டிருக்கின்றார்கள், அவர்களை என்னிடம் ஒப்படைக்கவேண்டும், அவர்களுக்கு நான் மரண தண்டனை அளிக்கப் போகின்றேன் என்று சொன்னான். அன்றைக்குத் தலைவராக இருந்த லென்த்தால் என்ற பெருமகனார், மரபின் அடிப்படையிலே மன்னன் முன்னால் மண்டியிட்டு, வரலாற்றுப் புகழ்பெற்ற மூன்று வாக்கியங்களைச் சொன்னார். "மாட்சிமைதங்கிய மன்னர் அவர்களே, எனக்குக் கண்கள் இருந்தாலும் பார்வையில்லை, காது இருந்தாலும் கேட்காது, நா இருந்தாலும் பேசமுடியாது, நான் இந்த அவையின் ஊழியன். இந்த அவையின் கருத்துதான் என்னுடைய கருத்து. இந்த அவையின் முடிவுதான் என்னுடைய முடிவு. இந்த அவையினர் இந்த ஐந்து மாண்புமிகு உறுப்பினர்களை உங்களிடம் ஒப்படைக்கக்கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றிவிட்டார்கள். ஆகவே உங்களுடைய கோரிக்கையை என்னால் ஏற்றுக்கொள்ளமுடியாது; மன்னிக்கவேண்டும் மன்னரே" என்று மண்டியிட்டுச் சொன்னார்.



இங்கும் அதுதான் என்னுடைய நிலை. இந்த அவையின் காவலன் நான். இந்த அவையின் முதல் ஊழியன் நான். ஆகவே, இந்த அவை எந்த முடிவை எடுக்கின்றதோ அதுதான் என்னுடைய முடிவு. இந்த அவை எந்தக் கருத்தைச் சொல்கின்றதோ அதுதான் என் கருத்து. பல நேரங்களிலே கூட நான் நினைப்பது உண்டு. என்னுடைய தலைவருக்குப் பின்னால், அரசியலில் இருந்த நேரங்களில், பல நேரங்களில் கேட்காமல் கூட என்னுடைய கருத்தைச் சொல்லிக் கொண்டிருப்பேன். இந்தக் குறையை இவனிடமிருந்து மாற்றவேண்டுமென்ற எண்ணத்தோடு என்னுடைய தலைவர் அவர்கள் இந்தப் பதவியில் என்னை அமர்த்தி வைத்திருக்கின்றார்களோ என்று கருதுகிறேன். ஆகவே, உங்கள் கருத்துதான் என் கருத்து, உங்கள் முடிவுதான் என் முடிவு என்ற நிலையை நான் எடுத்திருக்கின்ற காரணத்தால், நல்லவேளையாக பத்திரிகை நிருபர்கள் என்னைப் பேட்டி காணத் தேவையில்லை என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். உங்கள் கருத்து என்ன என்று கேட்டால், அவைக் குறிப்பிலே இருக்கும், நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள், அதுதான் என் கருத்து என்றுதான் நான் பதில் சொல்வேன்.

இன்னொன்றையும் இந்த நேரத்தில் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். எனக்கு வானளாவிய அதிகாரம் கிடையாது. என்னுடைய அதிகாரம், இந்தக் கூரை அளவுக்குத்தான் உண்டு. அந்த அதிகாரத்தை நான் இந்த அவையை முறையாக நடத்தப் பயன்படுத்துவேன். அந்த அதிகாரங்களிலே கூட, தவறு செய்கின்ற உறுப்பினர்களைத் தண்டிக்கின்ற அதிகாரம் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அப்படிப்பட்ட விதியை என்னுடைய பதவிக்காலத்திலே நான் உபயோகித்தது இல்லை என்ற பெருமையை, என்னுடைய பதவிக்காலம் முடிகின்ற நேரத்திலே எனக்கு அளிப்பதற்கு நீங்கள் ஒத்துழைப்பு அளிக்கவேண்டுமென்றுதான் நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

எதிர் அணியைச் சார்ந்தவர்கள் *11* பேர்தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்கள். அவையின் மொத்தக் கணக்கை வைத்துப் பார்த்து விகிதாச்சார அடிப்படையிலே பார்த்தால், அவர்களுக்கு ஒரு மணி நேரத்திலே மூன்று நிமிடம்தான் ஒதுக்க முடியும். இருந்தாலும் அதிலே என்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, உங்களுக்கு அதிக நேரத்தை ஒதுக்குவேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல--எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்

கால் பங்கு நேரம் ஆளுங்கட்சிக்கு ஒதுக்கினால் போதும் என்ற அறிவுரையை எனக்கு வழங்கினார்கள், அதே நேரத்தில் நான் நடுநிலையாகப் பணியாற்ற வேண்டுமென்ற நம்பிக்கையையும் தெரிவித்தார்கள்--170 பேர்களுக்கு கால் பங்கு நேரத்தை கொடுத்துவிட்டு, 70 பேர்களுக்கு முக்கால் பங்கு நேரத்தை நான் கொடுத்தால், நான் சபாநாயகராக இருக்க முடியாது. நான் எதிர்க்கட்சித் தலைவராகத் தான் இருக்க முடியும். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன மையக் கருத்தை நான் மீண்டும் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-30*

இந்த மன்றத்தின் தலைவர் என்ற முறையில் எனக்கு இருக்கிற பெரிய விருப்பம் 235 உறுப்பினர்களும் ஆண்டுக்கு ஒருமுறையாவது இந்த மன்றத்தில் பேசினார்கள் என்ற ஒரு புதிய வரலாறு இங்கே படைக்கப்பட வேண்டுமென்று நான் விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல தனி நபர் செல்வாக்கிற்காக வாக்களித்த காலம் போய்விட்டது. வாக்களித்த மக்களை நாம் திரும்பிப் பார்க்காமல் இருந்தால் அடுத்த முறை வீதியிலே கூட நுழைய விட மாட்டார்கள் என்பது எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அது மறுக்க முடியாத உண்மை என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள். அந்த வகையிலே எல்லா உறுப்பினர்களுக்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும். எல்லா உறுப்பினர்களும் பேசும் வாய்ப்பைப் பெறுகிறார்களா என்று ஆளுங்கட்சிக் கொறடாவும், எதிர்க்கட்சிக் கொறடாக்களும் பார்த்து முக்கியமாக அந்தப் பணியில் ஈடுபட வேண்டுமென்று அவர்களை அன்புடன் வேண்டுகிறேன்.

அவை முன்னவர் அவர்கள் என்னைப் பாராட்டிப் பேசினார்கள். நீதிக் கட்சிக்கும் எங்கள் இயக்கத்திற்கும் இருந்த தொடர்பைச் சொன்னார்கள். அது உண்மை என்று காட்டுகிற வகையில்தான் 60 ஆண்டுகளுக்கு முன்னால், காலம் சென்ற என்னுடைய தகப்பனார் அமைச்சராக இருந்த நேரத்தில் இந்த வளாகத்திற்கு வந்த என் தாயார் இப்போது தன்னுடைய 90-வது வயதில் இந்த விழாவைப் பார்ப்பதற்கு வந்திருக்கிறார்கள். அதன் மூலமாக நீதிக் கட்சிக்கும் இந்த இயக்கத்திற்கும் எப்படிப்பட்ட தொடர்பு உள்ளது என்பதை நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னைப் பாராட்டிப் பேசினார்கள். இதைவிட என் வாழ்க்கையில் எனக்குப் பெரிய சிறப்பு



கிடைக்கும் என்று நான் நினைக்கவில்லை. அமைச்சராகப் பணியாற்றினாலும் கூட இந்த வாய்ப்புக் கிடைத்திருக்காது. நான் ஏற்கனவே சொன்னதைப் போல அரசியலில் என்னை ஆளாக்கியவர் அவர். அவை முன்னவர் அவர்கள் சொன்னார்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தக் கழகத்தை ஒரு குடும்பம் என்று அழைத்தார்கள் என்று. பேரறிஞர் அண்ணாவின் மறைவிற்குப் பின்னால் இந்தக் கழகத்திலே இருக்கக்கூடிய இலட்சோப இலட்சம் உறுப்பினர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கழக அரசியல் தலைவராக மட்டுமல்லாமல் குடும்பத் தலைவராகவும் ஏற்றுக் கொண்டவர்கள். அந்த இலட்சோப இலட்சம் உறுப்பினர்களில் நானும் ஒருவன். இன்று அரசியல் காரணத்திற்காக நான் கட்சியில் உறுப்பினராக இருக்கக்கூடாது என்று முன்னவர் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். அதிலே எனக்கு வருத்தம் தான். ஏனென்றால், வெளிநாடுகளில் சட்டப்பேரவைத் தலைவரோ, நாடாளுமன்றத் தலைவரோ கட்சிகளுக்கு அப்பாற்பட்டு இருக்க வேண்டுமென்றால் அந்தத் தலைவர் அடுத்த முறை தேர்தலில் நிற்கிற நேரத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் அவரை எதிர்க்காது என்ற ஒரு மரபு உண்டு. ஆகவே அந்த மரபை நான் உங்களிடத்தில் கேட்டு அடுத்த தடவை தப்பித் தவறி முதலமைச்சர் அவர்கள் எனக்கு இடம் கொடுத்தால் நீங்கள் எதிர்க்கக் கூடாது என்று கேட்பதாக நீங்கள் நினைக்கக்கூடாது. மரபுகள் முழுமையாக பின்பற்றப்படுவதில்லை என்பதை மட்டும் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, அரசமைப்புச் சட்டத்தின் காரணமாக நான் தொடர்ந்து கட்சி உறுப்பினராக இருக்க முடியாது என்றாலும், நிரந்தரமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னுடைய குடும்பத் தலைவர் என்று சொல்வதிலே நான் பெருமைப்படுகிறேன். அந்த உறவுக்கும் நான் வகிக்கின்ற பதவிக்கும் எந்த முரண்பாடும் கிடையாது என்று 40 ஆண்டுக்காலமாக நான் வழக்கறிஞராக இருந்த காரணத்தால், சட்டம் எனக்குத் தெரியும் என்ற வகையிலே இதை நான் சொல்கின்றேன். ஒருவேளை யாராவது ஒரு சட்ட மேதை இதிலே முரண்பாடு உண்டு என்று சொன்னால், நான் அந்த உறவைத் தான் விரும்புவேனே அல்லாமல் இந்தப் பதவியை விரும்ப மாட்டேன். அந்த வகையிலே உங்கள் அனைவருக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-35*

நான் இறை நம்பிக்கை உள்ளவன். நான் வணங்குகின்ற தெய்வத்தை வேண்டுவது எல்லாம் ஒரு உயர்ந்த நாற்காலியிலே உட்கார்ந்தால்

53|124-7

மட்டும் ஒருவன் உயர்ந்த மனிதனாக ஆக முடியாது. என்னை ஆளாக்கியவர்கள் எல்லாம் கீழே உட்கார்ந்து இருக்கிற நேரத்தில் உயரமான நாற்காலியிலே உட்கார்ந்திருக்கிற நான் என்னுடைய தலைவர்களுக்கு சமுதாயத்திலே இருக்கிற உயரமோ அந்தஸ்தோ எனக்கும் வந்துவிட்டது என்ற ஒரு அகந்தையோ, ஒரு அறியாமையோ என்னுடைய உள்ளத்திலே வளரக்கூடாது. முன்னாலேயிருந்த சட்டப்பேரவைத் தலைவர்கள், அவர்கள் இருந்த நேரத்திலே வானளாவிய அதிகாரங்களைப் பெற்றவர்கள். இந்த நாற்காலியை விட்டு இறங்கிய பிறகு அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று தேடிப் பார்க்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில், அன்றாடம் இந்த நாற்காலியை விட்டு இறங்கியவுடன், நான் சாமானியன், மிக மிகச் சாமானியன் என்ற உணர்வு என்னுடைய உள்ளத்திலே நிரந்தரமாக இருக்கவேண்டும். அந்த எண்ணம் என்னுடைய உள்ளத்திலே மேலோங்கி நின்றால்தான் அடக்கத்தோடு என்னுடைய பணியைச் செய்ய முடியும். இந்தத் தமிழகத்தின் பெருமைகளை, மரபுகளை நிலைநாட்டுவதற்கு உங்கள் ஒத்துழைப்பை நான் வேண்டுகிறேன்.

மாண்புமிகு துணைத் தலைவர், திரு. இளம்வழுதி அவர்களை வாழ்த்துகிறேன். அவருக்கும் எனக்கும் ஒரே பாரம்பரியம்தான். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல பாரம்பரியம் என்றால் பணமோ சொத்தோ அல்ல. என்னுடைய தந்தையாரும் இந்த இயக்கத்திலே இருந்தார்கள். அவருடைய தந்தையாரும் இந்த திராவிட இயக்கத்திலே இருந்தார்கள். கடந்த காலத்திலே திரு. இளம்வழுதிக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களை இங்கே அவரோடு இருந்த உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். அந்தக் காட்சிகளை நல்லவேளையாக என்னைப் போன்றவர்கள் பார்த்ததில்லை. இந்த மன்றத்திலே பேசிய நேரத்தைக் காட்டிலும் அவர் வெளியே நின்ற நேரம் அதிகம் என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, அவரை நான் துணைத் தலைவர் என்று அழைக்கமாட்டேன், அவரை இணைத் தலைவர் என்றுதான் நான் அழைப்பேன். என்னோடு இணைந்து பணியாற்றக்கூடிய தலைவர். இதுவரை, எந்தத் துணைத் தலைவருக்கும் கிடைக்காத வாய்ப்பை அவருக்கு நான் அளிப்பேன். காரணம் வயது ரீதியாக என்னுடைய அரசியல் முழுமை பெறுகின்ற காலம். வயது ரீதியாக அவருடைய அரசியல் ஆரம்பிக்கின்ற காலம். ஆகவே, அவருக்கு ஏராளமான வாய்ப்புக்கள் கொடுக்க வேண்டும் என்று நான் எண்ணிக் கொண்டிருக்கிறேன். அதனால், எதிர்காலத்திலே, அவர் நல்ல ஒரு அரசியல்வாதியாக, ஒரு அரசியல் தலைவராக விளங்குவார் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



ஒட்டுமொத்தமாக இந்த மன்றத்தின் மரபுகளை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, இந்தியாவிலே முதன் முதல் தோன்றிய ஜனநாயக அமைப்பு நம்முடைய மேலவை. அதை ஒழித்துக்கட்டி பல ஆண்டுகள் ஆகிவிட்டன. இருக்கின்ற இந்த மன்றத்திலே மரபுகள் காணாமல் போய்விட்டன. இதை எல்லாம் மாற்றி அமைப்பதற்கு இந்தப் பேரவையின் தலைவர் என்ற முறையிலே மாண்புமிகு உறுப்பினர்களாகிய உங்கள் அனைவருடைய ஆதரவையும் தேடுகின்றேன். இந்த மரபுகளை நிலைநாட்டுவதிலே நான் கண்டிப்பாக இருப்பேன். அது முடியாத பட்சத்திலே, முதலமைச்சர் அவர்களிடம் சொல்லி, இந்தப் பதவியை விட்டு விலகி, வேறு யாரையாவது தகுந்த ஆளைப்போடுங்கள் என்று சொல்லி, நான் விலகிக் கொள்வேன். அந்த வகையிலே நீங்கள் எதை முக்கியமாக நினைக்கிறீர்களோ, அதுதான் என் உள்ளத்திலேயும் முக்கியமாகப் படுகிறது என்று சொல்லி, நீங்கள் அனைவரும் வழங்கிய வாழ்த்துரைகளுக்கு என் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய நன்றி உரையை முடிக்கிறேன்.

*முற்பகல் 11-40*

***திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பாராட்டு ஆற்றும்போது இந்தச் சட்டசபை தொடங்கிய காலம் தொட்டு நீங்கள் பொறுப்பு ஏற்றுள்ள வரை சபையினுடைய தலைவர்களாக இருந்தவர்களுடைய பட்டியலில் உள்ள பெயர்களைத்தான் நான் சொன்னேனே தவிர, இதில் இன்னின்னார் நல்லார் என்றோ, நன்றாக சபையை நடத்தினார்கள் என்றோ, அல்லது இன்னின்னார் இந்த விதத்திலே சபையை மோசமாக நடத்தினார்கள் என்றோ நான் பட்டியல் போட்டுச் சொல்லவில்லை. இங்கே உட்கார்ந்திருக்கிறவர்களிலே ஒருவர்தான் அங்கே தலைவராக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மனிதர்கள் என்றாலே நிறையும் குறையும் உடையவர்கள்தான். இப்போது நான் சொல்ல வந்தது, இந்த சபாநாயகர்களின் பெயரை எல்லாம் சொல்லி, இவர்கள் சொன்னவற்றிலே நல்ல தீர்ப்புகளை, நல்ல முன்னுதாரணங்களை எடுத்துக் கொள்ளுங்கள் என்று எந்தப் பெயரையும் சொல்லாமல்

சொன்னேன். இந்த விளக்கத்தைக்கூட நான் சொல்வதற்குக் காரணம், நீங்கள், சபாநாயகர் பேசியது எல்லாம் பத்திரிகையிலே வருகிறபோது என்னைக் குறிப்பிட்டுச் சொன்ன காரணத்தினாலே நான் யாரையோ வாழ்த்தியது போல, திட்டியது போல, இதெல்லாம் பத்திரிகையிலே வரக்கூடாது (சிரிப்பு) என்கிற காரணத்தினாலே இவற்றை இங்கே நான் சொல்லக் குறுக்கிட்டேன். உங்களுடைய கன்னிப் பேச்சு என்று சொன்னதாலே, சபாநாயகருடைய பேச்சில் குறுக்கிடக் கூடாது என்பதற்காக . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் முதலில் பேசியது பாராட்டுரை. இது பாதுகாப்பு உரை. *(சிரிப்பு)*

***திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் கட்சியின் தலைவர். அவருக்கு அடுத்து இருக்கிற எல்லோருக்கும் இது இரண்டும் அங்கேயும் தேவை, இங்கேயும் தேவை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களுக்கு ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகின்றேன். அவர்களே பேசும்போது சொன்னார்கள் என்னைப் பற்றி, அரசியலுக்கு அப்பாற்பட்ட முறையிலே எல்லாக் கட்சிகளோடும் நன்றாக பழகக் கூடியவர் என்று. அவரை ஒரு நல்ல நண்பராக நான் கருதுகிறேன். நான் சட்டமன்றத்திற்கு வந்து 16 ஆண்டுகள் ஆகிவிட்டன. இடைக்காலத்திலே அவர்கள் இருந்தார்கள். ஆகவே நண்பர் என்ற முறையிலே அவரை என்னுடைய அறையிலே அழைத்து யாரைப் பின்பற்றலாம் அல்லது வேண்டாம் என்று அவரிடம் கருத்து கேட்பதற்காகத்தான் நான் சொன்னேன். *(சிரிப்பு)*

## 5. அறிவிப்புகள்

### *(அ) அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்கள் நியமனம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 231(1)-ன்கீழ் பின்வரும் உறுப்பினர்கள் 1996-97-ஆம் ஆண்டுக்குரிய அலுவல் ஆய்வுக் குழுவிற்கு உறுப்பினர்களாக 23-5-1996-ஆம் நாள் முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.



மாண்புமிகு முதலமைச்சரவர்கள்

மாண்புமிகு பேரவை முன்னவர்

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின் துறை அமைச்சர்

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்

அரசு தலைமைக் கொறடா

எதிர்க்கட்சித் தலைவர்

திரு. ஆர். சொக்கர்

திரு. ஜி. பழனிசாமி

திரு. எஸ். திருநாவுக்கரசு

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்

திரு. ம. அப்துல் லத்தீப்

திரு. பி. என். வல்லரசு

அலுவல் ஆய்வுக் குழுவின் முதல் கூட்டம் இன்று மாலை 4-00 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அலுவல் ஆய்வுக் குழுவில் 17 பேர் இடம் பெறலாம். மற்றுமுள்ள மூன்று கட்சிகளின் பிரதிநிதிகளையும் அலுவல் ஆய்வுக் குழுவில் இடம் பெறச் செய்ய வேண்டுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சரின் வேண்டுகோள் ஏற்கப்பட்டுள்ளது. அவர்கள் பெயரையும் சேர்த்துக் கொள்ளலாம்.

***திரு. எஸ். திருநாவுக்கரசு:** உறுப்பினர்களின் பெயரை மட்டும் படித்தீர்கள். அலுவல் காரணமாக நீங்களே தலைவராக இருப்பீர்கள் என்று அதையும் அறிவிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 231 (1)-ன் கீழ், பேரவைத் தலைவர் அவர்கள்தான் இந்த அலுவல் ஆய்வுக் குழுவிற்கு தலைவர். இது ஏற்கெனவே தெரியும் என்று கருதுகின்றேன்.

[பேரவைத் தலைவர்]

முற்பகல் 11-45

### (ஆ) பேரவை அலுவல் குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று மாலை 5.30 மணியளவில் ஆளுநர் உரையாற்ற இருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகையால் 5-25 மணிக்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் அவரவர்கள் இருக்கையில் வந்து அமர வேண்டும். அவரவர்கள் இருக்கையிலே என்று சொல்வது தவறு, இன்னும் எல்லா உறுப்பினர்களுக்கும் இருக்கைகள் முறைப்படி அளிக்கப்படவில்லை. ஆனாலும் எல்லா உறுப்பினர்களும் 5-25 மணிக்கே இருக்கையில் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளைக் காலை (24-5-1996) 9-30 மணிக்குக் கூடும். (குறுக்கீடு)

பேரவை நிகழ்ச்சி நாளை காலை 9-30 மணிக்குத் தொடங்கும். இன்று மாலை 5.30 மணிக்கு ஆளுநர் அவர்கள் உரையாற்றுவார்கள். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 11-46 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

-எதுவுமில்லை-

218919

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.